


# குறிஞ்சிப் பேரிகை '97

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை
நுவரெலியா

உ30.6
குறிஞ்
SLIPR

*With Best Compliments from*

# NUWARA ELIYA MOTOR ENTERPRIESE

**Dealers in Motor spare parts,
Electrical Accessories, Batteries,
Tyres & Tubes,
And Estate Suppliers**

**No. C 30, Kandy Road,
Nuwar - Eliya.
T.P 052-3099, 2320.**

# குறிஞ்சிப் பேரிகை

## ஆண்டு மலர்

இதழாசிரியர் :-

இரா. சுப்பிரமணியம்

வெளியீடு :-

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை

1996/97

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலகமெல்லாம்"

# பேரிகையின் முழக்கத்தினுள்ளே...

நூலாசிரியர் இரா சுப்பிரமணியம்

இணையாசிரியர் குழு :- சு. இரவிச்சந்திரன்.
இரா. இராஜாராம்.
ந. லோகேஸ்வரன்.
பீ. சந்திரமோகன்.

அலோசனை :- க. தனபாலசிங்கம்.
சு. வேல்ராஜ்.

அட்டைப்படம் :- குணரட்னம் ஆட்ஸ், கண்டி.

அச்சுப் பதிவு :- பிரின்ட் டெக்.
69, சேர்கியூலர் வீதி.
ஹட்டன்.
பெக்ஸ் - 051-22771.

அன்பளிப்பு :- 125 ரூபாய் மட்டும்.

**நீங்கள் வாழ்க்கையில் முன்னேற
விரும்பினால், பிறர் முதுகின்
மேல் சவாரி செய்யாதீர்கள்!
உங்கள் கால்களினாலலேயே நடந்துச் செல்லுங்கள்**

# நூலின் உள்ளே......


- குறிஞ்சிப்பேரிகை பெயர் வெளியீடு, நூலாசிரியர்.
- குறிஞ்சிப்பேரிகை நூலாக்கக் குழு, ஆலோசனை, விலை
- சுவாமி ஆத்மகனானந்தாஜியின் ஆசி.
- சுவாமி முருகேசு அவர்களின் ஆசி.
- லக்ஸ்மன் ஜெயக்கொடியின் வாழ்த்துச் செய்தி.
- புத்திர சிகாமணியின் வாழ்த்துச் செய்தி.
- நூரளை மாநகரசபையின் மேயர் பந்துல சௌவிரத்தினவின் வாழ்த்துச் செய்தி.
- பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவலிங்கத்தின் வாழ்த்துச் செய்தி.
- பிரதி மேயர் லெ. நேருஜி வாழ்த்துச் செய்தி.
- வீ. இராதா கிருஷ்ணன் அவர்களின் வாழ்த்துச் செய்தி.
- பேரவைத் தலைவரின் இதயம் பேசுகிறது......
- நூலாசிரியரின் முப்பரிமாணப் பார்வையில்.....
- நிர்வாகச் செயலாளரின் பார்வையில்........
- பொருளாளரின் பொருளார்ந்த சிந்தனை......
- பேரவை அமைப்புச் செயலாளரின் முரசம்......
- அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் உள்ளக் குமுறல்......
- 96/97 பேரவையின் சாதனைகள்.
- கல்விக் கருத்தரங்குகளில் உதவிய மேன்மக்கள்.
- சிவலிங்க தரிசனம்.
- விவேகானந்தர் முத்திரை வெளியீட்டு சிறப்பு மலர்.
- இந்து மத யுகங்கள் கூறும் பண்புகள்.
- கட்டுரை - இந்திய மெய்யியல் ஒரு கண்ணோட்டம்
- போட்டி முடிவுகள் நடுவர் விபரம்.
- பேரவையினரின் மனதில் நிற்கும் நிழற்படங்கள்.
- கவிதை - உயர்ந்த மலைகளில் உயராத மலையகம் (1ம் இடம்)
- கவிதை - உயர்ந்த மலைகளில் உயராத மலையகம் (2ம் இடம்)
- கதை - அக்கரைகள் பச்சையில்லை.
- கவிதை - ஏற்றம் காணும் பெண்ணினமே
- கவிதை - மலையகமே எழுந்திரு
- கீதையில் கண்ணன்
- நிகழ்ச்சி நிரல்
- (1) Hindusm and Human Life
  (2) ஒரு இந்துவின் சிந்தனைக்கு

# சமர்ப்பணம்

நல் இதயத்துடன் – நமை
நல் வழிப்படுத்தி – அவள்
தன் புகழ் பாட – எமை
வையகத்தினுள் – பண்பினனாய்,
தவழ்ந்திடச் செய் (த) கருணை
உள்ளத்தவள் ஆதிபராசக்தி – யவள்
பாதக் கமலத்தினுள் – பாங்காய்
காணிக்கையாகும் – இந்த
"குறிஞ்சிப் பேரிகை" புகழ் – ஏற்ற
ஏற்றி போற்றி போற்றியே!

# ஆசிச் செய்தி



நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையினர், "குறிஞ்சிப் பேரிகை" என்ற பெயரில் தங்கள் ஆண்டு மலரை, நான்கு ஆண்டுகள் இடைவெளியின் பின்னர், வெளியிடவுள்ளனர் என்பதை அறிகிறோம்.

மக்களின் சமய, கலை, இலக்கிய, பொது அறிவை வளர்ப்பதில் இத்தகைய சமய நிறுவனங்கள் பெரும் பங்காற்றலாம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் குறிஞ்சிப்பேரிகை அமையும் என்பதில் ஐயமில்லை.

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையினருக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

"குறிஞ்சிப் பேரிகையின்" முழக்கம் அஞ்ஞானத்தை விரட்டி, ஞானம் பிறக்க வழிகோலட்டும் என வாழ்த்துகிறோம்.


*சுவாமி*

***ஆத்மகனாநந்தாஜி,***

***இராமகிருஷ்ண மிஷன்***

(இலங்கைக்கிளை தலைவர்)

40, இராமகிருஷ்ணா வீதி,

வெள்ளவத்தை,

கொழும்பு 6.

# ஆசிச்செய்தி



அமராதமாவே!

நுவரெலியா, இந்து கலாசார பேரவை "குறிஞ்சிப் பேரிகை" ஆண்டு மலரை வெளியிடத் தீர்மானித்துள்ளது கண்டு அகமிக மகிழ்கிறேன்.

மலையக மக்கள் மத்தியில் இந்து கலாச்சாரத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு மக்கள் மாண்புற வழிகாட்டும் பேரவையின் முயற்சி பரிபூரண வெற்றிபெற்று "குறிஞ்சிப் பேரிகை" ஆண்டு மலர் சீருற்ற நிலையில் சிறப்புப் பெற்று வெற்றிபெற அகிலாண்டேஸ்வரி, ஆதிஸக்தி அன்னை காயத்ரி தேவி அருள்புரிவாளாக.

**ஓம் சாந்தி**

**இங்ஙனம்**

**அன்பு**

**ஆர்.கே. முருகேசு**

**காயத்ரி பீடம்**

**நுவரெலியா**

## Massage from Hon. Lakshman Jayakody
## Minister of Cultural & Religious Affairs.

I have great pleasure in sending this message of greetings to the 'Nuwara Eliya Hindu Kalasara Peravai' on the release of their annual publication of "Kurunchi Perikai".

I am glad to know that the above 'peravai' had actively participated in Hindu Religious, educational and social activities for over seven years in Nuwara Eliya.

Annual Sovenirs such as 'Kurunchi Perikai' explains the activities of the 'peravai' and also affords an opportunity for the development of young talent.

I wish all success to the 'Hindu Kalasara Peravai' of Nuwara Eliya.

**Lakshman Jayakody**
**Hon. Minister of Buddha Sasana**
**Cultural & Religious Affairs.**

## வாழ்த்துச் செய்தி



# மலையகமெங்கும் முழங்கட்டும் "குறிஞ்சிப் பேரிகை"

'குறிஞ்சிப் பேரிகை' மீண்டும் வெளிவரவிருப்பது பேருவகையளிக்கின்றது. பூக்கட்டும் ஆயிரம் புதுமலர்கள் என்பதற்கிணங்க மலையகத்தில் பல்துறை நூல்களும், சஞ்சிகைகளும் அதிகம் அதிகமாக வெளிவரல் வேண்டும். இவற்றின் வாயிலாக தனியாத நம்மவர்களின் அறிவுத் தாகமும் இலக்கிய தாகமும் தணிந்திட வேண்டும் என்பது நீண்டகால எண்ணக் கிடக்கையாகும்.

பல்வகைச் சிறப்புகளுடன் 'குறிஞ்சிப் பேரிகை' மலையகமெங்கும் முழங்கட்டும் என உளமாற வாழ்த்துகின்றேன்.

இவண்,

**வி. புத்திரசிகாமணி சமாதான நீதவான்,**
**மத்திய மாகாண கல்வி, கலாசார**
**அலுவல்கள் அமைச்சர்,**
**கச்சேரி,**
**கண்டி.**

# வாழ்த்துச் செய்தி



இலங்கை திருநாட்டின் மலையக மக்களிடையே இலைமறைகாயாக இருக்கும் முயற்சிகளுக்கு இவ்வாறான பதிப்புகள் மேலும் நல்ல கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கலை எம்மக்களிடையே தொடர்ந்து மறையாமல் மணம் வீச வேண்டும் கலைகளை அன்றும், இன்றும், என்றும் இவ்வாறான "குறிஞ்சிப் பேரிகை" போன்ற நல்ல புத்தக வெளியீட்டின் மூலம் உருவாக்க வேண்டும் என்பதுடன், அவற்றை உயிரூட்டி மெருகூட்டி வரும், எமது நுவரெலியா இந்து கலாசார பேரவைக்கு எனது மனமார்ந்த நல்லாசிகள் உரித்தாகட்டும்.

அன்புடன்

**கௌரவ. முத்து சிவலிங்கம்**

**பாராளுமன்ற உறுப்பினர்,**

**(இ.தொ.கா. நிதிக்காரியதரிசி)**

**காப்பாளர் - நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை**

**நுவரெலியா**

# வாழ்த்துச் செய்தி



நுவரெலிய இந்து கலாசாரப் பேரவை தனது குறிஞ்சிப் பேரிகை என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதில் நான் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

இந்துக்கள் பெருவாரியாக வாழும் இந்த மாநகரில் நுவரெலிய இந்துகலாசாரப் பேரவை தனது கலாசார்த் தொண்டை நீண்டகாலமாக செய்து வருவதை நான் அறிவேன்.

மலர் ஒன்றையும் வெளியிட்டு அதன் மூலம் இந்து கலாசாரத்தை பேணிக்காப்பது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ்வாண்டு விழாவும், மலரும் (குறிஞ்சிப் பேரிகை) வெற்றி பெற எனது பற்பல வாழ்த்துக்கள்.

**பன்துல செனவிரத்ண (சமாதான நீதவான்) ஜே.பீ.யூ.எம்**
**மாநகர பிதா,**
**நுவரெலிய மாநகர சபை.**

# வாழ்த்துச் செய்தி



நுவரெலியா இந்து கலாச்சார பேரவையின் ஆரம்பகால உறுப்பினரும் தற்போதைய காப்பாளருமான நான் இப்பேரவையின் "குறிஞ்சிப் பேரிகை" என்ற மலர் வெளியிடுவதைக் கண்டு பெரும் மகிழ்ச்சியுடைகிறேன்.

இப்பேரவையால் நுவரெலியா மாவட்ட இந்து மத மக்களுக்கு ஆற்றும் பணி மகத்தானது. இப்பேரவையின் வாசிக்கும் துறையை ஊக்கு விப்பதற்கு ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஒருபடிமேல் சென்று குறிஞ்சிப் பேரிகை என்ற மலர் தொடர்ந்து வெளிவரவும், எதிர்காலத்தில் இந்து கலாசாரத்தை பாதுகாக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக!

இப்பேரவையின் முக்கிய குறிக்கோளான இந்து கலாச்சார மண்டபம் ஒன்று நுவரெலியாவில் அமைக்க வேண்டும் என்ற ஆசை எதிர்காலத்தில் நிறைவேற, என் நல்வாழ்த்துக்கள்.

**எல். நேருஜி ஜே.பி.யூ.எம்**
**பிரதி நகர முதல்வர்,**
**இந்து கலாசார பேரவையின் காப்பாளர்.**

# வாழ்த்துச் செய்தி



1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நுவரெலிய இ.க.பேரவை நுவரெலியா வாழ் இந்து மக்களின் நலன்களை மட்டும் இல்லாமல் இலங்கை வாழ் இந்து மக்களின் அபிலாசைகளையும் பூர்த்தி செய்வதில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றது.

ஆண்டுகள் தோறும், மாதங்கள் தோறும் பல நிகழ்ச்சிகளை நடாத்தி அதன் மூலம் இந்து மக்களிடையே எழுச்சியை உண்டாக்கி சமய அறிவை வளர்க்க ஒரு தூண்டுகோளாக இருக்கின்றது. ஆகவே இவர்களின் சேவையை பாராட்டுவதோடு எதிர் காலத்தில் மென்மேலும் சேவைசெய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவராக.

***அன்புடன்***

**வீ.இராதாகிருஷ்ணன் ~ சமாதான நீதவான்**

**காப்பாளர் - நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை**

**நுவரெலியா**

# 'தலைவரின் இதயம் பேசுகிறது'

உலகில் பல மதங்கள் பிறந்தன, வளர்ந்தன, பெருமை அடைந்தன. இன்னும் சில காலத் தீயில் எரிந்து கருகி அழிந்தன. இன்னும் சில ஏட்டு வழக்கில் மாத்திரமே இடம் பெறுகின்றன. இம் மதங்களுக்கு எல்லாம் மூத்து முதிர்ந்து முதன் மதமாய் ஒளிவிளக்காய் அழகு உமிழ்ந்து இளமை ததும்பி என்றும் அழியாது நின்று உலவுவது இந்து மதம். இஃது இனியது, பழையது, இனிமையும் தருவது வழிவழி அழியா வளநலமுறுவது. இதனால் அன்றோ "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்று கூறினரோ? இத்தகைய பெருமை வாய்ந்த மதம் தனியான கலை, கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி வரலாற்றுப் புகழ் பெற்று ஏறுநடை போடுகிறது.

இந்து சமயத்தின் கலாச்சாரத்தை அன்று மக்கள் வீதியோரத்து மரநிழல்களிலும், வீட்டோரத்து திண்ணைகளிலும் கூடி இருந்து கர்ண பரம்பரைக் கதைமூலமாகவும், பாடல் மூலமாக்வும் பரப்பி வந்தார்கள். நாளாவட்டத்தில் இதற்கென மன்றம் அமைத்து அவை பல கூடி அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் உள்ள அம்சங்களை மக்கள் மனதிலே புகுத்தினர். அதன் கால ஓட்டத்தில் தான் இன்று மலையக சிகரமான நுவரெலிய மாவட்டத்தில் நுவரெலிய இந்து கலாசாரப் பேரவை 1990-04-04 அன்று பிறந்து வளர்பிறையாகவும், வாழை இளம் குருத்தாகவும் வளர்ந்து இன்று உங்கள் முன் வெற்றிநடை போடுகிறது என்று கூறிப்பெருமைப்படுகிறேன். இதன் வளர்ச்சிக்கு முன்னை நாள் இந்து கலாச்சார அமைச்சர் திரு. பீ.பீ. தேவராஜ் அவர்களினதும், திரு. ராதாகிருஷ்ணன், திரு. சிவகுருநாதன், அவர்களின் அயராத உழைப்பே அத்திவாரம் என்பது எனது இதயத்தில் மென்மையாக ஒலிக்கிறது. இதன் பின்னர் வந்த எத்தனையோ செயல் வீரர்களினாலும், சிந்தனையாளர்களினாலும், கட்டிக் காப்பாற்றப்பட்ட இப்பேரவை கடந்து வந்த பல காட்டாறுகள் மத்தியிலும் அழியாது இன்று மக்கள் மனதிலும் மாவட்ட மட்டத்திலும் ஏன் நாடளாவிய ரீதியிலும் புகழ்பெற்று வீறுநடை போடுகிறது. அதற்கு காரணம் அரை நிர்வாணப் படங்கள், குடலைப் புரட்டும் இரட்டை அர்த்த வசனங்கள், சிருங்காரச் சிந்தனைகள், கண்களைத் தின்னும் சுவரொட்டிகள், பாலுணர்ச்சி மட்டுமே வாழ்க்கை என்று போதித்து வரும் இக்காலகட்டத்தில் எமது இந்து கலாசார பேரவை, இந்து மத கலாச்சாரத்தை தன்னால் இயன்ற அளவு மக்கள் மனதிலே பதிய வைத்து நெறிப்படுத்தி மனித நேயம் படைத்த மக்களாக வாழ வைக்கிறது என்பதை இன்று பெருமையாக கூறிக் கொண்டு எனது இதயம் மௌனப் புன்னகை புரிகிறது. இதே வேளையில் பேரவை எனது தலைமையில் இயன்றளவு ஏதோ சில நல்ல விடயங்களை செய்ததோடு, பேரவைக்கு அவ்வப்போது அளப்பரிய சேவைகளை நீங்களும் செய்துள்ளீர்கள் என்பதையும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது!

**க. தனபாலசிங்கம்**
"காணிப் பதிவுகாரரும் மேலதிக பெரும் பகுதி பதிவுகாரரும்"
தலைவர்,
நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை,
நுவரெலியா.

## நூலாசிரியரின் முப்பரிமாணப் பார்வையில் .......

நிமிர்ந்து நிற்கும் மலைகளில் தணிந்து நிற்கும் நாரளையூரில் பிறந்து நிற்க மாதவம் செய்திட்டோம்! இல்லையெனில் ஓர் நாகரீக சாகரத்தில் நீந்தி 'சைவம்' எனும் கரையை தரிசிக்க கிடைத்திருக்குமா என எண்ணுகிறோம். அது மட்டுமா.... நாரளையூரில் பிறந்து இன்று தன் புகழை இலங்கை முழுவதும் பரப்பி, அகலக் கால் வைப்பினும் ஆழவேர் பரப்பி நிற்கும் 'நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை'யின் குறிஞ்சிப் பேரிகையை எழுத்துருவாக்கி உங்கள் இதய நாதங்களுக்கிடையில் பகிர முடிந்திருக்குமா? நம் உறுப்பினர் அனைவருக்குமே, பிறவிப் பயனை அடைந்தது போல் ஒரு மின்னல் கீற்று.

பேரவையின் ஏழாண்டு கால வரலாற்றில் இரு முறை மாத்திரமே வெளிவந்த 'குறிஞ்சிப் பேரிகை'யை மீளவும் தலை நிமிர்த்தி 'ஆண்டு மலராக' உங்கள் கைகளில் தவழ விட்டுள்ளோம்! இது வெறும் விளம்பர ஏடாக அன்றி இந்து தர்மத்தின் 'ஏராக' இருக்கும் என்ற எண்ணமே நம் அனைவரையும் இறுமாப்பு அடையச் செய்கிறது.

பேரவையின் விருட்சங்களுக்கும், இனி வரும் 'பாதுகாவலப் பெரு மக்களுக்கும்' இது ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது நம் எண்ணம். இம் மலர் மேன் மேலும் மொட்டவிழ்த்து மணம் பரப்ப வேண்டும் என எம் ஆதித் தாயான ஆதிபராசக்தியை துணைக்கழைக்கின்றோம்.

வாழ்க குறிஞ்சிப் பேரிகை!
வளர்க அதன் இறை பணி!!

**இரா. சுப்பிரமணியம்**.B.A. (Gen)

---

கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும் என்று துணிந்து விட்டால் யாரையாவது பகைத்துக் கொள்ளத் தான் வேண்டும். "பகையே இல்லாதவன், என்று பேர் எடுத்தால் அவன் ஒரு காரியமும் செய்யாதவன்" என்று பொருள்.

"கடவுளுக்கும் பகைவர்கள்
இருக்கின்றார்கள்!

காந்திக்கும் பகைவர்கள்
இருந்தார்கள்!"

"அப்படிப்பார்த்தால் நாம் கிள்ளுக் கீரைகளே!!"

# நிர்வாகச் செயலாளரின் பார்வையில்........

ஒரு சமுதாயம் தமது வாழ்வு நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவேண்டுமானால் அச்சமூகத்தின் மத, கல்வி, கலாசார, பண்பாட்டு அம்சங்கள் மேலோங்கிய நிலையில் இருக்க வேண்டும். ஆனால் கடந்த காலங்களில் எமது மலையக சமூகத்தில் மேற்கண்ட விடயங்கள் திருப்தியளிப்பதாய் இருக்கவில்லை என்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த உண்மை.

இவ்வேளையில் தான் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் "எழுந்திருங்கள் உழையுங்கள், இவ்வாழ்வு எத்தனை நாள்? இவ்வுலகிற்கு வந்து விட்டீர்கள் எனவே அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் உங்களுக்கும், மரங்கள், கற்களுக்கும் என்ன வேறுபாடு? அவையும் தோன்றுகின்றன, இறக்கின்றன," என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கமைய பல நல்ல உள்ளங்களின் செயற்பாட்டினால் உருவானது எமது 'நுவரெலியா இந்து கலாசாரப்பேரவை' எனும் எழுச்சியமைப்பு.

இப் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் என்ற வகையிலும் தற்போதைய நிருவாகச் செயலாளர் என்ற ரீதியிலும் இவ்வமைப்பு கடந்து வந்த பாதையில் எமது இந்து மத, கலாசார, கல்வி விடயங்களில் பற்பல முன்னேற்றகரமான முயற்சிகளை எடுத்திருந்தாலும் இன்னும் பல தடைகளைத் தாண்டி, சாதனை புரிய வேண்டிய சமூக, கலாசார, கல்விப் பிரச்சினைகள் எம்முன் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

இவ்வமைப்பு வருடா வருடம் சந்தா மூலம் உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபையைக் கூட்டி நிர்வாகச் சபையினைத் தெரிவு செய்கிறது. இதன் மூலம் புத்துணர்வும், புதிய சிந்தனையும் கொண்ட எமது இளைஞர்கள் இவ்வமைப்பின் எழுச்சிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் தமது சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இதன் காரணமாகத் தான் அண்மையில் இந்து கலாசாரத் திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்ட அற நெறிவிழாவில் எமது பேரவை இவ்வாண்டின் சிறந்த அமைப்பாக இனம் காணப்பட்டு பரிசு வழங்கப்பட்டதை குறிப்பிடுவதில் பெருமை கொள்ளலாம்.

இதனால் தான் "பிறர்க்கென வாழ்பவர்களே வாழ்பவர்கள், மற்றவர்கள் நடைப்பிணத்திற்குச் சமமானவர்கள்" என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்கமைய ஒன்றுபடுவோம், ஒற்றுமைகொள்வோம், புதிய உலகம் படைப்போம், என எமது இந்துமத சகோதர, சகோதரிகளிடம் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

எமது துணிவுடைய இந்துமத இளைஞர்களே, சகோதரிகளே நீங்கள் அனைவரும் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள், என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள், நிமிர்ந்து நின்று எமது மத, கலாச்சார, பண்பாட்டின் முன்னேற்றத்துக்கு தன்னம்பிக்கையுடன் உழையுங்கள். ஏனெனில் 'கடவுளிடம் நம்பிக்கையற்றவனை நாத்திகன் என்று பண்டைய மதங்கள் கூறின. ஆனால் புதிய மதமோ தன்னிடமே நம்பிக்கை அற்றவனை நாத்திகன் என்கிறது.

எனவே தான் முதலில் நாம் தெய்வங்களாவோம், அதன் பின் பிறரும் தெய்வங்களாகத் துணை புரிவோம். "ஆகுக ஆக்குக" இதுவே நமது மேற்கோளாகட்டும்.

வாழ்க இந்துமதம்!

வளர்க நம்பண்பாடு!

**சுப்பிரமணியம் வேல்ராஜா,**
நிர்வாகச் செயலாளர்,
நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை
நுவரெலியா.

# பொருளாளரின் பொருளார்ந்த சிந்தனை

நாம், எமது இன, மத, பண்பாடு மற்றும் கலாசாரம் என்பவற்றை எமது உயிரோடிணைந்த இரத்தத்தோடு கலந்த ஒரு கூறாகக் கொண்டிருக்கிறோம். அதுதான் எம்மைப் பெற்ற தாயின் உள்ளம். எனவேதான் இந்துமதத்தின் அடிப்படைக் கோட்பாடே "தாய்" என்று கற்றறிந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அனுபவரீதியாகவும் உணர்ந்திருக்கிறோம். ஆனாலும் இன்று நடப்பதென்ன? நேற்று நடந்ததென்ன?

கடந்த பல ஆண்டுகளாக ஏன்? 1983 கறுப்பு ஜுலையின்பின் நமது மத, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை நமது இந்து மக்கள் முன்னே கொண்டு செல்வதற்கு யாருமற்ற நிலையே மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாநகரிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்ததெனலாம். அவ்வேளையில்தான் 1989இன் இறுதிக் காலகட்டத்தில் சில நல்ல உள்ளங்களின் சேர்க்கையினால் பிரசவித்தது எமது "இந்து கலாசாரப் பேரவை" எனும் புத்தெழுச்சிமிக்க இயக்கம்.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த எழுச்சியமைப்பு கடந்த 7 வருடங்களாக வீறு நடைபோடுகிறதென்றால் அது இங்குவாழும் இன உணர்வுமிக்க, மத எழுச்சியுள்ள மாந்தர்களின் பங்களிப்பும், உழைப்புமே காரணம். இருந்த பொழுதிலும் எமது பேரவையின் செயல் வேகமானது மேற்கண்ட விடயங்களில் போதாதென்றே கூறவேண்டும். இது நமது உள்ளக் கிடக்கையல்ல, நமது ஒற்றுமையின்மை, பொருளாதார பலவீனம் என்பவற்றை பறைசாற்றி நிற்கின்றன.

ஆனாலும் எமது பேரவை மத, கலாசார உணர்வின் அடிப்படையில் அவ்வப்போது பல தடைகளைத்தாண்டி ஒரு முன்னேற்றகரமான பொருளாதார அடிப்படையைக் கொண்டிருக்கிறது என்பது நம்மெல்லோருக்கும் பெருமை தரும் விடயமாகும். இந்த அடிப்படையை எமது பேரவை கொண்டிருப்பதற்கு கடந்த கால நிர்வாகங்கள் மத உணர்வுமிக்க எமது மக்கள் ஆகியோர்தான் மூல காரணிகள் என்பது எமது முழு நம்பிக்கை இவ்வேளையில் எம்முடன் கைகோர்த்த சகோதர உள்ளங்கள் அனைவருக்கும் இவ்வமைப்பின் தற்போதைய கௌரவ பொருளாளர் என்ற ரீதியில் தலைவணங்கி எனது நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். மென்மேலும் எமது பேரவையின் நிதிவளம் மேலோங்க உங்கள் அனைவரினதும் கைகளைப் பற்றி நிற்கிறேன் ஏனெனில் நமது பேரவைக்கு, எதிர்காலத்தில் பெரும் சமுதாயக் கடமை காத்திருக்கிறது.

எது எப்படியோ, "நினைக்கையில் நெஞ்சு வேகும் செந்தணலாக அவிகிறது! இன்று மதம் பலருக்கு சுமை! உணர்வு மிக்க சிலருக்கே இன்பத்தேடல்" இத்தருணத்தில் எமது பேரவையின் இந்து மத, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைத் தழுவிய "குறிஞ்சிப் பேரிகை" தனது வரலாற்றில் மூன்றாவது இதழினை விரிக்கப்போகிறதென்பதில் பேருவகையடைகிறேன். இப் "பேரிகையின்" உள்ளடக்கம் நமது மலையகமெங்கும் வாழும் சைவ உள்ளங் களில் மதவெழுச்சியையும் புத்துணர்வையும் மேலோங்கச் செய்ய வேண்டுமென்பது எனது பேரவா.

"எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது செல்மின்! பலமே வாழ்வு, பலமின்மையே மரணம்! என்ற "சுவாமி விவேகானந்தரின்" நற்கூற்றிற்கமைய எமது பேரவையின் "குறிஞ்சிப்பேரிகை" வளமுடன் வளர வாழ்த்துகிறேன்.

**பெரியசாமி – சந்திரமோகன்**
**கௌரவ பொருளாளர்,**
**நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை.**

# பேரவை அமைப்புச் செயலரின் முரசம்...

"சமயம்" அல்லது "மதம்" என்ற சொல் பொதுவாக ஆன்மீக நெறியினைக் குறிப்பதாகவே நாம் கொள்ளுகிறோம். ஆன்மீக நெறியின் அடிப்படையிலேயே வாழ்க்கை முறையும் பெரும்பாலும் அமைகின்றது.

ஆதனால் தான் ஒவ்வொரு சமயத்தவரினதும் வாழ்வியல் முறைகள் வேறுபட்டு காணப்படுகின்றது.

எனவே "மதம்" என்பதில், "ஆன்மீக நெறி", அந்த ஆன்மீக நெறியில் எழும் "வாழ்க்கை நெறி" இரண்டும் அடங்குகின்றன.

ஆன்மீகம் அதை ஒற்றி வளரும் வாழக்கை முறை இவ்விரண்டின் மலர்ச்சியைத் தான் "பண்பாடு"(Culture) என்றும் "நாகரீகம்" என்றும் நாம் குறிப்பிடுகின்றோம்.

'சமய நெறியின் மலர்ச்சியே நாகரீகத்தின் பாங்கு ஆகும்' என்று உலகப் புகழ் பெற்ற வரலாற்று அறிஞர் ஆர்னால்டு டாய்ன்பி பகர்கிறார். (அதாரம் "Choose Life"-Oxford University Press London)

ஆதலினால் "இந்து சமயப் பண்பாடு" பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமெனில், இந்து சமயம் போதிக்கும் ஆன்மீக ஞானத்தையும் அதையொட்டி வளர்ந்த வாழ்க்கை நெறியையும் நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். பின் மற்றையோர் அறிய களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இந்து தர்மத்தின் மரபு வழியே தொன்று தொட்டு வந்த, வாழ்க்கை நெறிகள் (Personal Customs) வாழ்க்கைச் சட்டங்களாக (Personal Laws) மதிக்கப்பெற்றன. இது "நிரந்தரமற்ற அரசு"களால் அமுலாக்கப்படும் "சட்டம்" (Goverment Law) எனும் இரும்புக்கரத்தை விட வலிமை மிக்கது. காரணம் கௌதமர், பௌதாயனர் முதலிய முனிவர்கள் கி.மு.300ம் ஆண்டுகளில் தொகுத்துக் கூறிய "சூத்திரங்களை" இன்றும் நாம் ஆரத் தழுவி அதன் படி பல சுயகட்டுப்பாடுகளுக்குட்பட்டு வாழ முயற்சிக்கிறோம், அல்லது வாழ்ந்து வருகிறோம் என்பது உலகறிந்த உண்மை!

ஆகவே விஞ்ஞானம் கூறும் "பரிணாமத் தத்துவம்" விலங்கு உருவை மனித வடிவாக்க மட்டுமே உதவி யுள்ளது. ஆனால் மனித உள்ளத்தினுள் ஊன்றிக் கிடந்த "மத யானையை" "மதம்" எனும் ஆன்மீக நெறியினைக் கொண்டே விரட்ட முடிந்துள்ளது. இதன்படி இந்து தர்மம் காட்டிய வழியில் இது வரை கால் பதித்து நடந்து விட்டோம். இனியும் "தடம்" மாற முடியாது! இது என்றோ பரமன் முடித்த முடிபு!

அந்த முடிவு கூறுவது, 'பழமையிலும் பழமையான, புதுமையிலும் புதுவகையான கருத்துச் செறிவை உள்ளடக்கிய **இந்து மதத்தை, எவனும் தழுவ வேண்டியதில்லை! அது உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஆரத் தழுவியுள்ளது**' என்பதே உண்மையாகும்!

துன்பமும், துயரமும் , வேதனையும் சோதனைகளும் உலக மக்கள் அனைவரையும் வாட்டும். இக்கால கட்டத்தில் "இவை அனைத்தும் சைவர்களுக்கு மட்டுமே" என பிரசாரம் செய்யும் கைதேர்ந்த பிரசாரகர்களின் ஏமாற்று வித்தைகளுக்கு அடி பணிந்து சிலர் மதம் மாறுகிறார்கள்.

இப்படியான மத மாற்றங்கள் எதிர்காலத்தில் முற்றாக நிறுத்தப்படல் வேண்டும். பிற மதங்களைப் போல் "இந்துக்களே ரஷிக்கப்படுவர்; மற்றவர் நரகத்துக்குச் செல்வார்கள் என்று கூறும் வாசகம் இந்து மத சாஸ்திரம் எதிலும் இல்லை. எனவே இந்து மதத்துவத்திலுள்ள மனித்த்துவம் புரியவில்லையா? அல்லது 'காய்க்கும் மரத்திற்கு தானே கல்லடி' என்று வாலாவிருக்கின்றீர்களா?

இப்படியான ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் தான் நமது 'பேரவை' தனது சங்க நாதங்களை நாலா பக்கமும் இசைத்து இந்து மதத்தின் மகத்துவத்தை "இந்து மக்களுக்குப் பரப்பி வருகிறது".

இதன் அடிப்படையில் அவலங்களையும், அலட்சியங்களையும் பின்னோக்கி தள்ளி ஏறு போல் வீரு நடை போடும் "நுவரெலியா இந்துக் கலாசாரப் பேரவை" இனிவரும் காலங்களிலும் சமூக மயமாக்கலில் (Socialization) தன்னிறைவு கண்டு, முதிர்வு (Maturity) உறுப்பினர்களின் குழுவால் பார் முழுதும் "சைவ ஒளி" பரப்பும் என்பது சந்தேகமற்றதே!!

"தெளிவு பெற்ற மதியினாய் வா! வா! வா!"
"சிறுமை கண்டு பொங்குவாய் வா! வா! வா!"
என கொட்டு முரசை கொட்டுபவன்

**இரா. சுப்பிரமணியம்**
**அமைப்புச் செயலாளர் 1996/97**
**நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை**
**நுவரெலியா**

வாழ்க சைவம்! வளர்க அதன் போதனைகள்!

நற்சிந்தனை: —
கங்கை நீர் சிறந்தது: அதனிலும் சிறந்தது அபிஷேக நீர்
அதனிலும் உயர்ந்தது ஏழைகட்காக உழைக்கும்
உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும்
வியர்வை நீர்!

# அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியரின் உள்ளக் குமுறல்.....

உலகில் வாழும் மக்கள் அனைவரும் தத்தமக்கென ஒரு சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். சமயமும் வாழ்க்கையும் வேறுவேறானது அல்ல. அது வாழ்க்கையோடு இரண்டற கலந்த அம்சமாகும். ஒரு மனிதன் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழி சமைத்துக் கொடுப்பது சமயமாகும். தனக்கென ஒரு சமயம் இல்லாதவன் வாழ்க்கை நடுக் கடலில் தத்தளிக்கும் துடுப்பற்ற படகு போன்றதாகும். சமயம் தனிமனிதன் உட்பட அவன் வாழுகின்ற சமூகம், நாடு ஆகிய எல்லாவற்றையும் செம்மையுற செய்யும் சிக்கனம் மிகுந்த சாதனமாகும். எனினும் எல்லா மக்களாலும் சமயத்தின் உள்ளார்ந்த விடயங்கள் அனைத்தையும் உணர்ந்து கொள்வது கடினமான செயலாகும்.

எமது இந்து சமயமும் பரந்த கிளைகளைக் கொண்டதும் பல விழுதுகளைக் கொண்டதுமான ஆல விருட்சம் போன்றது. அதில் பல அழமான தத்துவ ஊற்றுக்கள் உள்ளன. அது மட்டுமன்று இந்து சமயம், ஒரு இந்து வாழக் கூடிய சிறந்த வாழ்க்கை நெறிமுறைகள் பற்றியும் கூறி நிற்கின்றது. இவ்வாறான ஒரு சமயத்தை தனித்து பள்ளியிலோ அல்லது அன்றாட வாழ்க்கை நடைமுறைகளில் இருந்தோ கற்று தெளிந்துவிட முடியாது. அத்துடன் மக்களின் அருங்குண விருத்தி என்பன எல்லாம் சிறந்த முறையில் விருத்தி அடையவே அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பமாயின.

இவ் அறநெறி பாடசாலைகளின் முக்கிய நோக்கம் இளம் சிறார்கள் மத்தியில் நல்லொழுக்க பண்புகளுடன், இந்து சமய கலாசார பண்பாட்டை பேண வேண்டும் என்பதும் ஆகும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். அந்த இளமைப் பருவத்து அறநெறி கல்வியை திறம்பட வழங்கும் நோக்கம் கொண்டு நுவரெலியா இந்து கலாசார பேரவையானது, 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06ஆம் திகதி ஸ்ரீமத் தந்திரதேவா சுவாமிகள் தலைமையில் மீண்டும் ஒரு புதுப்பொலிவு அடையச் செய்தது.

எமது சமயம் வாழ்க்கையைப் பற்றி இவ்வாறு கூறுகிறது. "இந்த உலக வாழ்க்கை என்பது ஓர் ஆழமான சமுத்திரம். இதில் உலக ஆசைகள் என்ற தண்ணீர் நிரம்பியுள்ளது. அதனால் அந்தச் சமுத்திரம் கடக்க முடியாததாக இருக்கிறது. இதைக் கடக்கும் பொருட்டு இறைவன் ஜீவனுக்கு மானிட சரீரம் என்ற படகை வழங்கியுள்ளார். கணனி மயமான உலகில் ஒரு கணப்பொழுது கண் மூடி இறைவனை சிந்திக்க நேரம் கிடைக்காது. அல்லல்படும் மக்கள் கூட்டத்தையே காணமுடிகிறது. கணனி மயத்திலும் சமய தொண்டு புரியவந்தவர்களுக்கு இறைவன் சோதனை இருக்கவே செய்கிறது.

அறப்பள்ளியை சமய கல்வியுடன், நடனக் கலை, இசைக் கலை என்பவற்றையும் இணைந்து கற்பிக்க நினைத்த போது சில பல சோதனைகள் வந்தன. எமது சமுதாயத்தில் வழமையாகக் காணப்படும் ஆசிரியர் இன்மை அல்லது பற்றாக்குறை என்ற பதங்களே அவை. இதனால் இசைக்கலை திறம்பட நடைபெறவில்லை.

மரத்தின் வேருக்கு நீர் ஊற்றுவதன் மூலம் கிளைகளும் இலைகளும் வளர்ச்சி பெறுவது போல எமது சமய விழுமியங்களை மாணவன் என்ற மரத்திற்கு ஊற்றவும் அது கிளைகளையும் இலைகளையும் கொண்ட செழிப்பான மரமாக வளர ஆசான் என்ற சிறந்த நீர் தேவை. அதனை செயலில் காட்ட தன் நலம் கருதாத சிறந்த ஆசிரியர்கள் முன் வரவேண்டும்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த உள்ளம் கொண்ட மாணவர்கள் தமக்கு கிடைத்தவற்றை "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற இலக்கணத்திற்கு ஏற்ப கற்று தெளிவு பெற்று வருகின்றனர். இந்து சமயத்தின் எதிர்கால முதுகெலும்புகள் தாமே என்பதை உணர்ந்து தமது பண்பாட்டு கலாசார நடவடிக்கைகளில் பங்கு கொள்கின்றனர்.

'அறிவை தந்தையாகவும் திருப்தியை தாயாகவும் சத்தியத்தை சகோதரனாகவும் வைத்துக் கொள்' என இந்து சமயம் உபதேசிக்கின்றது. இவ்வாறான வார்த்தைகளை அர்த்தமுள்ளவைகளாக ஆக்கி வாழ்ந்து காட்டு வேண்டிய பொறுப்புமிக்கவர்கள் இன்றைய இளந்தலைமுறையினர். அவர்களை அதற்கு ஒப்பானவர்களாக வாழ வழி காட்ட வேண்டியவர்கள் இன்றைய சான்றோர்கள். தாம் செய்யும் செயலில் வைக்கும் நம்பிக்கையும், உறுதியும் நாளை எமது சமய வாழ்வுக்கு பேரிகை முழக்கமாக அமையும்.

**செல்வி. செ. விக்னேஸ்வரி,**
**(உபசெயலாளர்)**
**நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை,**
**நுவரெலியா.**

# 1996/97 நிர்வாக ஆண்டு

## பேரவையின் மௌனமான சாதனைகள்

**இனியொரு விதி செய்வோம்! அதை எந்த நாளும் காப்போம்,**

என்று களம் புகுந்த நன்னாள். 1996 ~ 07 ~ 15

- 10 ~ 08 ~ 1996 க. பொ. த உயர் தரத்திற்கான இலவசக் கருத்தரங்கு ~ (நு /பரிசுத்த திரித்துவக் கல்லூரி மண்டபம்)
- 06 ~ 09 ~ 1996 ஓய்விலிருந்த அறநெறிப்பள்ளியை துயிலெழுப்பிய நாள். (நு /பரிசுத்த திரித்துவக் கல்லூரி மண்டபம்)
- 01 ~10 ~ 1996 ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய (நு வரெலியா) மண்டலாபிஷேக பூஜையும், அன்னதானமும் வைபவமும்.
- 01 ~ 10 ~ 1996 கோயில் மேடையில் பக்தர்களை பரவசமாக்கிய கலை விழா. (ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபம்)
- 27 ~ 10 ~ 1996 அறநெறிப்பள்ளிக்கூடாக பரதநாட்டிய வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்ட நாட்டிய நாள். (ஆலய மண்டபம்)
- 1996 ~ 11 ~ 23 கணிதம்
- 1996 ~ 11 ~ 24 விஞ்ஞானம்
- 1996 ~ 11 ~ 30 சமயம்
- 1996 ~ 12 ~ 01 தமிழ்

} க. பொ. த சாதாரண தரத்திற்கு இலவசமாக கருத்தரங்குகள் வைக்கப்பட்ட திருநாட்கள். (நு / புனித சவேரியார் கல்லூரி) (நு / நல்லிளைப்பாற்றி கன்னியர் பாடசாலை)

- 1997 ~ 01 ~ 12 நு வரெலியா மாநகரசபை, பிரதேச சபைகளுக்குட்பட்டோருக்கான கோலப்போட்டிகள் நடைபெற்ற திருநாள். (ஆலய மண்டபம்)
- 1997 ~ 01 ~ 15 விவேகானந்தரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு நாள். (ஆலய மண்டபம்)
- 1997 ~ 02 ~ 21 ஆலய மண்டபத்தில் சிவராத்திரிக்கு தயாரித்தளித்த கலை நிகழ்ச்சிகள்.
- 1997 ~ 04 ~ 25 ஆண்டு விழாவிற்கான திறந்த போட்டிகளின் இறுதி நாள்.
- 1997 ~ 05 ~ 31 ஆண்டு விழாவிற்கான பாடசாலை மட்ட போட்டிகள்.
- 1997 ~ 07 ~ 13 'குறிஞ்சிப் பேரிகை' நு ால் வெளியீட்டு விழா.
- 1997 ~ 07 ~ 13 ஆண்டு விழா.

சிறந்த, தூய மனிதர்களுடைய வாழ்வின் முன்மாதிரி ஒன்றுதான்,
நம்மை உத்தம சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் உந்தும்। (ஐன்ஸ்டீன்)



# சிவ - லிங்க தரிசனம்

கடலில் ஆழ்ந்து விட்ட சிந்து வெளி நாகரீகம் மீண்டும் உலகத்து அறிவியல் ஆராய்ச்சியாளரால் வெளிக் கொணரப்பட்டது ஏதோ உண்மை தான். இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஒரு சிதைந்த நகரத்தின் கதையல்லவா?

தேடிப் பெற்ற நகரத்தில் கோயில் போன்ற சிதைந்த கட்டிடங்களுக்கருகாமையில் "ஆண் உறுப்பு" போன்ற உருவங்கள் கிடைத்தன. நகைத்தனர் ஐரோப்பியர். இது என்னடா? மூடர்கள்! இவர்கள் காமலோலர்களா? இழித்துரைத்தனர்! முடிவு "உலகத்தின் உதயம் இது தானடா" என சில அறிவியல் மேதைகள் சிரித்தவரின் சிந்தனையைத் தூண்டினர். பயன் இந்து மதத்தின் உலகத் தத்துவம், வாழ்வியல் தத்துவம் என்பன, யதார்த்த பூர்வமான நிதர்சனம் என முழு உலகமும் ஏற்றுக் கொண்டது!

எனவே "இலிங்கம்" பற்றி நாமும் அறிந்துக் கொள்வோம். மாணவர்களே, சைவப் பெருமக்களே உங்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். இதை நீங்கள் வாசித்த பின் உங்கள் நண்பர்களுக்கும் பூரண விளக்கமொன்றை கொடுக்க தயாராகுங்கள்! இனி சிவ–லிங்க தரிசனம் காண்போமா?

1. ஆலயங்களில் காணும் விக்கிரகங்களில் முக்கியமானது எது?

   சிவலிங்கம்.

2. சிவலிங்கம் என்பதன் பொருள் என்ன?

   சிவம் + லிங்கம் = சிவலிங்கம்

   சிவம் –> கடவுள்<br>
   லிங்கம் –> அடையாளம்<br>
   } எனவே இது கடவுளின் அடையாளம் ஆகிறது.

3. "லிங்கம்" என்பதன் விரிந்த பொருள் யாது?

   லி – லயம், ஒடுங்குதல்

   கம் – போதல், தோன்றுதல்

   [ஆன்மாக்களும், உலகங்களும் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்குமான இடம்]

4. சிவலிங்கத்தின் அமைப்பு யாது?

   அடிப்பகுதி பீடம். இது ஆவுடை எனப்படும். (ஆவுடை = சக்தி)

   பீடத்தின் மேல் உள்ள நீண்ட பகுதி பாணம் அல்லது லிங்கமாகும். ஆவுடையின் மேற்பகுதியில் கோமுகம் ஒன்றும் காணப்படும்.

5. சிவலிங்க உருவம் எதை விளக்குகிறது?

   சிவலிங்க உருவம் ஏனைய விக்கிரகங்களைப் போல மனித உருவம் அற்றது. அதாவது மற்றைய உருவங்களை உருவாக்குவதற்கும், இறுதியில் எல்லாம் தன்னுள் லயமாவதற்குமான உருவம் என்பதை விளக்கும்.

6. ஆவுடை, லிங்கத்தின் கீழ் அடங்கியிருத்தல் எதைக் குறிக்கும்?

   சக்தி சிவத்துக்குள்ளே அடக்கம் என்பதை.

**துவாபர யுகம்**

இங்கு தர்மத்தின் மதிப்பு மேலும் இறங்கிய நிலையில் இருந்துள்ளது. மனிதன் ஏற்கனவே பெற்ற பலத்தால் மனிதனையே அடித்து துன்புறுத்தியுள்ளான். மனித உயரமும் 10 1/2 அடி வரை தேய்ந்துள்ளது. உளப் பண்புகளில் பிறழ்வான நடத்தையைக் காட்டியுள்ளான். போட்டிகள், பொறாமைகள், கொலை வெறி என்பன இருந்துள்ளது. இங்கு மனித தர்மம் இரண்டு காலில் இருந்துள்ளது. இந்தயுகம் ஏழு லட்ச ஆண்டுகளாகும். இது செப்பு யுகம் என விஞ்ஞானம் கூறுகிறது.

**கலி யுகம்**

இது இறுதியான யுகம் இதனை இரும்பு யுகம் என மெய்யியல் போதிக்கிறது. இங்கு தர்மம் ஒற்றைக் காலில் நின்று தவிக்கிறது. தீய சக்திகள் ஓங்கிவிட்டன. எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு நோக்கும் காலம். தாய் மேல் தந்தைக்கு நம்பிக்கையில்லை. தனயன், தங்கை மீது மோகம் கொள்ளும் காலம். மனித உயரம் 7 1/2 அடிக்கும் அதற்கு கீழும் குறைந்து விட்டது. கெட்ட வழிகளில் முன்னேறும் ஆசை பெருகும். விபச்சாரம், ஊழல் மலியும் யுகம். இது சுமார் 3 1/2 இலட்சம் ஆண்டுகள் நீடிக்கும்.

ஆமாம் இந்துக்களே, நமது சாஸ்திரம் பகரும் கலியுகத்திலேயே நாம் இன்று வாழ்கிறோம். இதிலும் நல்லவர்கள் வாழ்கிறார்கள். என்பதுவும் மறுப்பதற்கில்லை தானே?

நவீன விஞ்ஞானமும், மனிதன் தோன்றிய காலத்தை சுமார் 50 இலட்ச ஆண்டுக்குள்ளேயே வரையறுத்துள்ளது. இதனையே இந்து மத சாஸ்திரங்களும் கூறுகின்றன. 1988ம் ஆண்டு புதை பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு சுமார் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் புதையுண்ட மனிதனின் எலும்புக் கூடு ஒன்று கிடைத்துள்ளது. இதன் உயரம் சுமார் 9 அடியாக இருந்துள்ளது. (ஆதாரம் - Science For Every One U.S.S.R Press)

**- ஆசிரியர் -**

---

குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய
மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும் என்பதில்,
வெற்றிக்குரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக
எனக்குத் தோன்றுகிறது.

– சுவாமி விவேகானந்தர் –

# சிவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை ஒட்டி நடைபெற்ற முத்திரை வெளியீட்டு விழாவுக்காண சிறப்கு மலர்

அன்று, தை மாதம் திகதி மாலை நேரம் 5 மணி

'அப்பாடா, ஒரு வழியா கோலப் போட்டிய சிறப்பா நடத்தியாச்சு" என்கிறார் பொருளாளர் சந்திரமோகன்.

“ம்கூம்......... எனக் கென்னவோ கோலப்போட்டிக்கு செலவழிச்ச பணம் நாம் திட்டமிட்டதிலும் கூடி போச்சு போல இருக்கு என்றார் தலைவர். (எப்போதும் இவர் கணக்கில் கொஞ்சம் கறார்) தொடர்கிறது அரட்டை, திடீர் என 'சுபானி ஜுவலர்சுக்கு' ஒரு கனவான் வந்து நிற்கிறார். தன்னை அறிமுகம் செய்கிறார். (நாம் கூடிக் கொள்ளும் ஒரு இடம் சுபானி ஜுவலர்ஸ்) 'நான் தான் விஸ்வஹிந்து பரிசத்து இலங்கைக் கிளைச் செயலாளர்' உங்கள் பேரவையின் பிரதமகாப்பாளர் சுவாமி ஆத்மகனாந்தாஜியிடம் இருந்து வருகிறேன்' என்கிறார் திரு. நந்தகோபன். தொடர்ந்தார். '15 – 10 – 1997 இலங்கை அரசின் ஏற்பாட்டில் இலங்கை இராம கிருஷ்ணமிசன் தலைவர் முத்திரை ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளார். அதே தினத்தில் நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையும் நுவரெயாவில் முத்திரை வெளியிட வேண்டுமாம். இது சுவாமிஜியின் அன்புக்கட்டளை! தட்ட முடியுமா?

'ச்சா..... நல்ல வாய்ப்பு' முக மலர்ச்சியுடன் கூறுவது உபபொருளாளர் இராஜாராம்.

தலைவர் தனபால சிங்கமோ, அர்த்த புஸ்டியுடன் நிர்வாகச் செயலாளரையும் அமைப்புச் செயலாளரையும் நோக்க,

கோலப் போட்டி நடத்திய களைப்பு தீர முன்னமே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்படும் முத்திரை வெளியீட்டுக்கான முனைப்பு தீவிரமானது! செயல்வடிவமானது!

பொருளாளரின் செயல் துரிதமானது .தலைவர் தபால் ஆபிசுக்கு ஓடினார். செயலாளர்கள் பதிப்பகத்துக்கு விரைகிறார்கள்!

15 – 01 – 1997..

நுவரெலியா ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய மண்டப மேடை, மணமேடை போல காட்சியளித்தது. உபபொருளாளரும் ஏனைய உறுப்பினர்களும் பம்பரம் போல் சுழன்றனர்.

காலை 9.30

மங்கள விளக்கேற்றலுடன் முத்திரை வெளியீட்டு வைபவம் ஆரம்பமானது. பிரதம அதிதி கௌரவ. அமைச்சர் வீ. புத்திர சிகாமணி. ஆலய மண்டபம் நூறளை பிரதேச மாணவர்கள், தனவந்தர்கள், சைவபெருமக்களாள் நிரம்பி வழிகிறது. படப்பிடிப்பாளர் கண்ணன் நினைவுகளை நிழற்படமாக்குகிறார்.

பேரவை உறுப்பினர்களின் முகத்தில் பெரிய மகிழ்ச்சி!

இரண்டே நாட்களில் இவ்வளவு பெரிய சாதனையா? வாய்விட்டே கூறுகிறார் தலைவர்! ஆமோதிக்கிறார் நிர்வாகச் செயலாளர் வேல்ராஜ்! அமைதியாக நிற்கிறார், அமைப்புச் செயலாளர் புன்னகையுடன்! ஆமாம், ஈத தான் இன்றைய 'நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை' இதன் சாதனைகள் மேன் மேலும் தொடர வேண்டும்.

# யார் இந்த விவேகானந்தர்?

ஆக்கம் :-

**பிரகலாதன்**, B.A,Dip.in.Edu.

**கண்டி.**

அந்த புனித மக்ரஷன் கிராந்தி தினம்!

1863 ஜனவரி 12ம் நாள், உலகத்திற்கு ஆர்ப்பாட்டமில்லாமல் புவனேஸ்வரி தேவியின் கருவறைக்கு விடை கொடுத்தபடி உலகில் காலடி எடுத்து வைக்கிறான் வீரேஸ்வரா என்ற கருத்துப் பெயரைக் கொண்ட நரேந்திர நாத்!

இந்த உன்னதப் புதல்வன் இந்திய மண்ணில் தோன்றிய மற்றுமோர் "விடிவிளக்கு" என அக்கணத்தில் யாரும் அறிந்திலர்.

ஆனால் தெரிந்தோ தெரியாமலோ சூட்டப்பட்ட நாமமான "நரேந்திர நாத்" ன் உட்பொருள் "கடவுள் அருள் பெற்ற மனிதன்" என்பதற்கமைய உலகை இன்னமும் அவன் ஆட்கொண்டுள்ளான் என்றால் இது தெய்வத் தன்மையல்லவா?

நரேந்திரா சிறு பருவத்தில் பெரிய குழப்பக்காரராகவும், துடிதுடிப்பு மிக்கவராகவும் திகழ்ந்தது எதிர் காலத்தில்தான் கடைப்பிடிக்கப் போகும் அமைதியும் சாந்தமும்மிக்க ஆன்மீக வாழ்வை நினைத்தா என எண்ணத் தோன்றுகிறது. காரணம் எந்நேரமும் தனது சகோதரிகளை சீண்டி அழ வைப்பதை சிறுவயதில் அவரின் தாய் தந்தையர், அயலவரிடம் சதா கூறிச் சென்ற தடயங்களாய் இருந்துள்ளன.

சிறு வயதிலேயே எதையும் மத்தியஸ்த்தம் புரிந்து உணரும் பாக்கியத்தைத் தனது குழந்தைப் பருவத்திலேயே அவர் தெரிந்து வைத்திருக்கிறார். இந்தச் சிறுவயது எண்ணத்தின் வெளிப்பாடு அவரை உலகை தெளிவான பார்வையில் நோக்கவைத்ததோடு, வளியும் வளி சார்ந்த புவி மண்டலமும் கூட ஏதோ ஆன்மீக அடிப்படையில் அவரது உள்ளத்தில் வித்தியாசமான எண்ணத்தை பசுமரத்தாணி போல் படியச் செய்தது. உலகைப் புதுப் பார்வை பார்க்கவும் வித்திட்டது. தவிர, சிறு வயதிலேயே சமஸ்கிரத மொழியிலும், இலக்கிய அறிவிலும் நாட்டத்தைக் காட்டியதோடு அல்லாமல் மிகுந்த ஞாபகச் சக்தியையும் உள் வாங்கியிருந்ததை அவரின் ஆசான்கள் புரிந்து கொண்டனர்.

நரேந்திர நாத் விபரமறிந்து வயதுக்கு வர வர, அவர் சார்ந்த கல்வியைப் பெறுவதற்கு பெற்றோர் அவரை மென் மேலும் ஊக்குவித்தனர். இப்படியான கால கட்டத்தில் ஒரு நாள், தந்தையான விஸ்வநாத்திடம் "இந்த உலகில் எனக்கென்று ஒரு இடம் பிடித்து நான் நற்பெயரோடு வாழ்வது எப்படி?" எனக் கேட்டுள்ளார் நரேந்திர நாத்.

தந்தை கூறிய பதில் அவரை பெருமை, அகம்பாவம், பொறாமை என்பவைகள் அற்ற தூய மனிதனாக வாழ வைத்தது. அப்படியானால் தந்தையின் பதில் தான் என்ன? மகனே நரேந்திரா "நீ ஒரு போதும் கர்வம் கொள்ளாதே!" என்பதே அப்பதிலாகும். ஆம், தந்தையிடமிருந்து அறிவையும், அன்னையிடமிருந்து உண்மை, நேர்மையையும் கண்ட அந்த நரேந்திரநாத் என்ற உன்னத பிள்ளையே, எதிர்காலத்தில் விவேகானந்தர் என்ற உயர்ந்த இலட்சிய மனிதனாக இவ்வுலகை தன் ஆன்மீக ஒளியால் விழிப்புறச் செய்தது என்றால் மிகையாகாது.

இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு, பல வீனப்பட்டுக் கிடக்கும்

இந்தியாவை கட்டியெழுப்ப அவர் உறுதி பூண்டார். பற்பல பிரச்சினை அலைகளுக் கு மத்தியிலும் இந்து சாம்ராஜ்யம் நிலைத்திருப்பதை அவர் உணர்ந்தார். ஒரு நதி என்றும் பின்னோக்கிச் செல்லாது என்பதைப் போல அயிரமாயிரம் ஆண்டுகளாக முதிர்ச்சி பெற்று வந்துள்ள இந்து தேசியத்தின் மரபுத் தன்மையானது பின்னோக்கி பாயாது என சுவாமி தெளிவுறக் கண்டார்.

"உங்கள் விதியை நீங்களே நிர்ணயிங்கள்" என வீரமுடன் யதார்த்த பூர்வமாகக் கூறிய முதல் இந்து மத துறவி விவேகாந்தராகத் தான் இருக்கும்.

மேலும் "வெறும் சடங்குகள், உடல் பலவீனப் படுமளவுக்கு விரதம் அனுஷ்டித்தல்" என்பன இந்து மதத்தை புண்படுத்துகிறது என்றார்.

இந்து தர்மம் புனித சமூகத்திற்குரியது! மனிதர் தமது கலாசாரத்தையும், தனித்துவத்தையும் ஏன் ஜனநாயத்தையும் மனிதவுரிமைகளையும் கூட பேணி பாதுகாத்து வரும் மகா மதமாக இந்து மதம் திகழ்கிறது என்றார்.

இன்று கூட இந்துக்களிடம் பரப்பப்பட வேண்டிய ஒரு நற்செய்தி உள்ளது. "வாழு, வாழவிடு" என்பதே அந்த தேவச் செய்தியாகும். இதுவும் வீரத் துறவி சுவாமி விவேகானந்தர் கூறிச் சென்றதே.

"ஜீவ சேவையே சிவ பூஜை" என்பதே விவேகானந்தரின் தாரக மந்திரம். எவன் ஒருவன் ஏழைகளிலும் பலவீனமானவர்களிலும், நோய்வாய்ப்பட்டவர்களிலும், சிவனைக் காண்கிறானோ அவன் தான் உண்மை சிவ பக்தன் என்றார். இதுவும், இன்றைய இந்துக்களுக்குக் கூறிச் சென்ற வாசகமாகவே படுகிறது, என நான் எண்ணுகிறேன்.

சிகாகோ, சர்வமத மகாசபையில் "புத்த சமயம் இந்து சமயத்தின் நிறைவு" எனும் பொருள்பட கூறினார். "கருணையுணர்வை பௌத்த மதம் நிறைய பெற்றுள்ளது. அதனை இந்து சமயத்தில் ஊடுருவச் செய்ய வேண்டும்" என நாசூக்காக கூறியுள்ளார். ஏன்? இந்திய இந்துக்களை அவர் அதிகாரம் செய்யும் பாசீச வாதிகளாகவே கருதுகிறார். ஒரு இந்துவும் சேவை செய்ய விரும்புவதில்லை. மேலும் கீழ்படிதல் என்பது ஒரு துளியளவும் இந்துக்களுக்கு இல்லை என்பதே அவரது வாதமாகவுள்ளது. தான் நினைத்ததை சரி என வாதிடும் திறன் மட்டுமே இந்துக்குள் விழித்துக் கிடக்கும் மரபாக உள்ளது. ஏனையவை உறக்கத்தில் மதிமயங்கி கிடக்கிறது. இதே உறக்கத்தில் மனிததத்துவமும் பாழ் பட்டு விட்டது என இந்துக்களின் பலவீனங்களை அப்பட்டமாக கூறுகிறார் அந்த மகா புருஷர்.

நான் ஓர் இந்து, நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு உலகம் முழுவதும் என் சிறு கிணறுதான் என்று நினைக்கிறேன். இதே போல் ஒரு கிறிஸ்தவனும் முகம்மதியனும் நினைக்கிறான். இதனால் உலகை துண்டாடி இருக்கும் வேற்றுமை எனும் வேலிகள் இறுக்கமடைகின்றதேயொலிய அன்பு, சமாதானம், தோழமை என்பன எமக்கு பரிட்சயம் இல்லாமலே செல்கிறது என அப்பட்டமாக கூறுகிறார்.

இப்படியாக சீர் கெட்டு கிடந்த இந்துக்களின் அவலங்களைப் போக்க இறை தூதராக இப்பூவுலகில் அவதரித்த சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் இன்றும் எமக்கு புரியவில்லை என்பது தான் வேதனையிலும் வேதனை மிக்கது. யார் இந்த விவேகானந்தர் என்பது தெரியாமலே இருந்தாலும் கூட அவர் கூறிச் சென்ற உத்தம கருத்துக்களின் செறிவையாவது எம்மால் நம்மவருக்கும் பரப் முடியுமாயின் அது சிவனுக்கு நாம் செய்யும் திருத் தொண்டாக அமையும். என்பது உண்மையிலும் உண்மையே!!.

# இந்திய மெய்யியல் - சாங்கிய தர்சனம்

மல்லிகா இராசரத்தினம், M.A ~ மெய்யியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்திய மெய்யியல் வரலாற்றில் சாங்கிய தர்சனம் மிகவும் பழமை வாய்ந்த மெய்யியல் முறைமையாகக் கருதப்படுகின்றது. மகாபாரதத்திலும் அதனைப் போன்ற பிற இலக்கியங்களிலும் சாங்கியத்தைப் பற்றிக் காணப்படும் குறிப்புகளிலிருந்து மதிப்பிடும் பொழுது இத்தர்சனம் ஒருகாலத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த தன்மையினை அறிய முடிகின்றது. ஆனால் தற் பொழுது சாங்கியம் நடைமுறையில் பின்பற்றப்படும் மெய்யியல் முறைமையாக இல்லை. அதன் இலக்கியத்தின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. இக்கால அறி ஞர்கள் சாங்கியத்தின் தொடக்கம் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கொண் டுள்ளனர்.

சாங்கிய-யோக முறைமைகளின் அடிப்படைக் கருத்துக்கள் முதன் முதலில் உபநிடதங்களில் காணப்படுவதனை பல அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். மரபு கபிலரை சாங்கியத்தின் மூல ஆசிரியராகக் கொள்கின்றது. சாங்கியத்தினை நிறுவியவர் மரபு வழியாக கபிலர் என்று கூறப்படுகின்ற போதிலும் இந்திய சிந்தனையாளர்[1] பலர் இக்குறிப்பு மேலோட்டமானதே எனக் குறிப்பிடுகின்றனர். சாங்கியக் குறிப்புக்கள் சாத்தோக்கிய உபநிடதம்[2] பிரஸ்ன உபநிடதம்[3] கடோப நிடதம்[4], மூண்டோக உபநிடதம்[5], சுவேதாஸ்வரத உபநிடதம்[6] போன்ற உபநிடதங்களிலும் குறிப்பாக மகாபாரதத்திலும்[7] பகவத்கீதையிலும்[8] காணப்படுகின்றன. ஸ்மிருதி இலக்கியங்களிலும் புராணங்களிலும் சில கருத்துக்கள் காணப்படுகின்றன. வேதாந்த சூத்திரத்தில் பாதராயணர் உபநிடத அறிவுரைகளை முறைப்படுத்தும் பொழுது சாங்கியக் கோட்பாடு உபநிடதங்களின் கருத்தாக அமையமுடியாது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றார். சாங்கியம் உபநிடதங்களின் அறிவுரைதான் என்ற கருத் துடையவர்கள் அக்காலக்கில் இருந்துள்ள காரணத்தினாலேயே அவர் அடிக்கடி அதனைக் குறிப்பிட வேண்டியதாக இருந்திருக்கலாம். உபநிடதங்களில் இடம்பெறும் சில கருத்துக்கள் சாங்கியத்திற்கு அடிப்படையாக இருந் திருக்கலாம்.

பாதராயணரின் பிரதானமான நோக்கங்களில் ஒன்று உபநிடதங்கள் இருமைக் கொள்கையாகிய சாங்கியத்தினை போதிக்கின்றன என்ற கருத்தினை மறுப்பதாகும். எதனையும் தெளிவாகக் கொள்ளக் கூடிய தகவல்களைப் பெறமுடியாவிடினும் சாங்கியம் ஆரம்பத்தில் உபநிடதங்களின் கருத்தினைக் கொண்டு ஆரம்பித்தபோதிலும் பின்னர் பௌத்த ஜைன செல்வாக்கிற் குட்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது. சாங்கியம் கடவுட் கோட்பாடற்ற காட்சிப் பொருட்கொள்கையாகவும் (Atheistic realism) ஆத்மீகப் பன்மை வாதமாகவும் (Spiritualistic pluralism) இணைக்கப் படமுடியாத இருமைவாதமாகவும் (Dualism) காணப்படுகின்றது. இந்தவகையான சாங்கியத்தினையே பாதராயணரும் வேதாந்திகளும் மறுக்கின்றனர். மிகப் பிந்திய காலமாகிய கி.பி. 16ம் நூற்றாண்டில் எழுந்த சாங்கிய சூத்திரத்தின் விளக்க உரையான சாங்கிய பிரவசன பாஷ்யத்தின் ஆசிரியரான விஞ்ஞான பிஷு போன்ற பிற்பட்டகால சாங்கிய முறைமையின் ஆசிரியர்கள் தமது கொள்கைகளுக்கு அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த உபநிடதங்களின் ஆதரவைக் காண முற்பட்டனர். இதனால் சாங்கியக் கோட்பாட்டின் அடிப்படைகளை உபநிடதங்களில் எடுத்துக் காட்டுகின்றனர்.

மூல சாங்கியம் (classical Sankya) கடவுட் கோட் பாடுடையதாகவும் ஒருடைவாதம் சார்ந்ததாகவும் இருந்திருக்கலாம். எனவும் நம்பப்படுகினறது. ஆனால் சாங்கிய முறைமையில் இவ்வாறான கருத்துக்கள் இடம்பெறவில்லை. சாங்கியத்தின் மூல ஆசிரியராகக் கருதப்படும் கபிலரே சாங்கிய பிரவசன சூத்திரத்தினை எழுதியவராகக் கருதப்பட்டபோதிலும் பிற்பட்ட கால ஆசிரியர்கள்

அதனைக் குறிப்பிடாத தன்மையினால் அது கி.பி. 14ம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகக் கருதப்படுகினறது. ஏனெனில் இது கடவுட் கோட்பாட்டினை ஏற்றுக்கொள்ள முனைகின்றது. மூல சாங்கியம் கடவுட் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்டபோதிலும் ஈஸ்வரக் கிருஷ்ணர் இது கபிலருக்கு முரண்பட்ட கருத்து என மறுக்கின்றார். ஈஸ்வரக் கிருஷ்ணர் சாங்கிய காரிகையில் குறிப்பிடும் கபிலர், ஆரிய, பாஞ்சாஷிகா போன்றவர்களின் சாங்கிய நூல்கள் மிகவும் முற்பட்ட காலத்தில் ஆக்கப்பட்ட போதிலும் அவை நமக்குக் கிடைக்கவில்லை.

கபிலர் புத்தருக்கு அதாவது கி.மு. 6ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராகவும் அவர் எழுதிய சாங்கிய சூத்திரம் நீண்ட காலத்திற்கு முன்னரே தொலைந்து விட்டதாகவும் மரபு ரீதியாகக் கருதப்படுகின்றது. எனவே ஈஸ்வரக் கிருஷ்ணரின் சாங்கிய காரிகை என்ற நூலே எமக்குக் கிடைக்க கூடிய மிகப் பழமை வாய்ந்ததும், பிரபல்யமானதுமான நூலாக விளங்குகின்றது. அதனைவிட கௌடபாதரின் சாங்கிய காரிகை பாஷ்யம், வாசஸ்பதி, மிஸ்ராவின் தத்துவ கௌமுகி விஞ்ஞான பிஷுவின் சாங்கிய பிரவசன பாஷ்யம் என்பவை சாங்கிய முறைமையின் சிறந்த நூல்களாகும்.

சாங்கியத்ததின் பழமை வாய்ந்த கருத்துக்களைப் போதிக்கும் சான்றுரிமை வாய்ந்த சாங்கிய காரிகை என்ற நூல் ஈஸ்வரக் கிருஷ்ணரால் கி.பி. 5ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகும். அவர் காளிதாசரின் சமகாலத்தவராகக் கருதப்படுகின்றார். அந்நூல் எழுபது செய்யுட்களால் ஆக்கப்பட்டுள்ளது. இதனால் இந்நூல் சாங்கிய ஸப்ததி என வழங்கப்படுகின்றது. சாங்கிய தர்சனத்தின் கொள்கையியலான கருத்துக்களை சுருக்கமாக ஆனால் மிகத் தெளிவாக அது விளக்குகின்றது. "இந்தியப் புலமை இலக்கியம் அனைத்திற்குமே முத்து"[9] என அந்நூல் வர்ணிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு கி.பி. 9ம் நூற்றாண்டினைச் சேர்ந்த புகழ்பெற்ற அத்வைத அறிஞரான வாசஸ்பதி மிஸ்ரா முதல் பலர் அதற்கு விளக்கம் அளித்துள்ளனர். இந்நூல் சீன மொழியில் எழுபது பொன்னுரைகள் (The Golden Seventy Discourse) என்னும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டதாகவும் கருதப்படுகின்றது.

சாங்கிய தர்சனத்தைப் பற்றிய மற்றுமொரு குறிப்பிடத்தக்க நூல் தத்துவ-சமரசம் என்பதாகும். அந்நூலின் பெயர் குறிப்பிடுவது போலவே அந்நூல் மிகவும் சுருக்கமாக அமைந்துள்ளது. இது சாங்கிய தர்சனத்தின் மிகவும் பழமை வாய்ந்த நூல் என மாக்ஸ்முலர் குறிப்பிடுகின்றார்.[10] ஆனால் அவருடைய கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கபிலரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் சாங்கிய சூத்திரத்தின் பெரும்பகுதி பழமையான தாக இருந்தபோதிலும் அந்நூல் கி.பி. 14ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறமுடியாதுள்ளனர். இந்நூல் ஆறு அதிகாரங்களைக் கொண்டதாகவும் அதில் சாங்கிய தர்சனத்தின் அடிப்படைக் கொள்கைகள் தெளிவுபடுத்தப்படுவதாகவும் அமைந்துள்ளது. அந்நூலின் நான்கு அதிகாரங்கள் அதன் கொள்கையியல் விளக்கத்தினைக் கொண்டதாகவும் ஓர் அதிகாரம் எதிரிடையான பிற தர்சனங்களை ஆய்வதாகவும், மற்றைய அதிகாரம் சாங்கியக் கொள்கையின் முதன்மையான கருத்துக்களை விளக்குவதாகவும் அமைந்துள்ளன. இதற்கு உரை எழுதிய விஞ்ஞான பிஷு சில மாறுபட்ட கருத்துக்களையும் தர முனைகின்றார். பொதுவாக இம் மாறுபட்ட கருத்துக்கள் வேதாந்த தர்சனத்திற்கு இணையான கருத்துக்களை வழங்கவதாக அமைகினறன. இதுவே பிற்கால சாங்கியம் என அழைக்கப்படுகின்றது.

பொதுவாக சாங்கியமும் யோகமும் இணைந்த தர்சனங்களாகக் கருதப்பட்ட போதிலும் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பினைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது. இவற்றில் எது பிந்தியது என்பது தெளிவாக இல்லாவிட்டாலும் அவை இன்று நமக்குக் கிடைக்கும் அமைப்பில் யோகம் பிந்தியது என்பதில் ஐயமில்லை. யோகத்திலும் பல உபநிடதக் கருத்துக்கள் காணப்படுகின்றன. யோகதர்சனத் தினைப் பொறுத்த வரையில் பதஞ்சலியின் யோக சூத்திரமே முதல் நூலாகக் கருதப்படுகின்றது. சாங்கியமும் யோகமும் இணைந்தே முழுமையான தர்சனமாக கருதப்படுகின்றது.

## சாங்கியக் கொள்கையியல்

சாங்கியம் என்ற சொல் சரியான அறிவைக் குறிப்பதாகவும், எண்களைக் குறிப்பதாகவும் உள்ளது. பகவத் கீதை சாங்கியம் என்ற சொல்லை உண்மையான அறிவு என்ற கருத்தில் பயன்படுத்துகின்றது. இந்தவகையில் சாங்கியம் என்ற தர்சனம் சரியான அறிவைப் பெறுவது பற்றிய மெய்யியலாக அமைகின்றது. இதனால் சாங்கிய தர்சனம் பிரதானமாக அறிவியல் சார்ந்ததாகவும் (Intellectual) கோட்பாடு அல்லது கொள்கையில் சார்ந்ததாகவும் (Theoretical) கருதப்படுகின்றது. சாங்கிய தர்சனத்தின் படி சரியான அறிவு என்பது புருஷனுக்கும் பிரகிருதிக்குமிடையிலான வேறுபாட்டினை இனம் காணுதலாகும். சாங்கியம் கூறும் கோட்பாட்டு ரீதியான பௌதிகத்தின் கருத்துக்களை அறிவுரைகளை நடைமுறை சார்ந்த வாழ்க்கையில் பின் பற்றக் கூடிய ஆத்மீக வழிமுறைகளை யோகம் எடுத்துக் காட்டுவதனால் இவ்விரு முறைமைகளும் இணைந்தே ஒரு முழுமையான மெய்யியல் தர்சனமாகக் கருதப்படுகின்றன. யோகம் என்பதன் கருத்து ஆரம்பத்தில் பிரகிருதியிலிருந்து புருஷன் பிரிவதனையே குறிப்பதாக இருந்தது. இதுவே சாங்கிய தர்சனத்தின் முடிந்த நோக்கமுமாகும்.

சாங்கியம் அடிப்படையில் பிரகிருதி (சட்டத்தின் மூலம்) புருஷன் (ஆன்மாக் கள்) என்ற இரு பொருட்களையும் ஏற்றுக் கொள்வதினால் இருமைவாதத்தினைப் போதிக்கின்றது. அதாவது சடத்திற்கும் ஆன்மாவுக்குமிடையிலான வேறு பாட்டினைப் போதிக்கின்றது. புருஷன் எனக் குறிப்பிடப்படும் ஆன்மாக்களைப் பலவாக ஏற்றுக் கொள்வதால் இது ஆத்மிகப் பன்மைவாதமாகும். மேலும் செந்நெறிச் சாங்கியம் (Classical Sankya) கடவுளைப்பற்றி எதனையும் குறிப்பிடாததால் அது கடவுட் கோட்பாடற்ற கொள்கையாகும் இதனால் சாங்கியம் நிரீஸ் வரவாத சாங்கியம் என அழைக்கப்படுகின்றது. பிரகிருதி பரிணாமம் அடைவதாக ஏற்றுக் கொள்ளும் சாங்கியம் சட்டத்தின் மூலத்தினையும் உலகப் பொருட்களையும் உண்மையாக ஏற்றுக் கொள்வதானால் காட்சிப் பொருட்கொள்கையாகின்றது. (Realism) இந்த வகையில் புருஷனுடன் இருபத்து நான்கு சடத்தின் பரிணாமக் கூறுகளையும் ஆராய்வதானல் இருபத்தைந்து தத்துவங்கள் பற்றி சாங்கியம் கூறுகின்றது.

## சாங்கியத்தின் காரண காரிய வாதம் (Theory of Causction)

சாங்கியம் கூறும் காரண காரிய வாதத்திலேயே அதன் பிரகிருதி பரிணாமவாதம் தங்கியுள்ளது. எல்லாக் காரண காரியக் கோட்பாடுகளும் காரியம் காரணத்தில்முன்கூட்டியே தங்கியுள்ளதா இல்லையா? என்ற கேள்விக்கு விடை அளிப்பனவாகவே அமைந்துள்ளன. காரணத்தின் காரியம் முன்கூட்டியே இல்லை என்று கூறுபவர்கள் அசத்காரியவாதிகளாகும். காரணத்தில் காரியம் முன்கூட்டியே உள்ளது. காரியம் காரணத்தில் தங்கியுள்து எனக் கூறுபவர்கள் சத்காரியவாதிகள் ஆகும். அசத்காரியவாதிகளின் கருத்துப்படி காரியம் புதிய தோற்றமாக - உருவாக்கமாக அல்லது புதிய ஆரம்பமாகக் கருதப்படுகின்றது. நியாய வைஷேஷிகம், ஹீனயான பௌத்தம், உபோகாயுதம் மீமாம்சையின் பிரிவு போன்றன அசத்காரியவாத்தினை அல்லது ஆரம்ப வாதத்தினைப் போதிக்கின்றன.

ஆனால் சத்காரிய வாதிகள் மறுபக்கத்தில் காரியம் என்பது புதிய தோற்றமோ அலலது புதிய ஆரம்பமோ அல்ல எனவும் உண்மையில் காரியம் என்பது ஏற்கெனவே காரணத்தினால் உள்ளடங்கியிருந்தது எனவும் கூறுகின்றனர். சத்காரியவாதிகள் காரணத்தில் உள்ளடங்கி இருப்பதே காரியத்தில் வெளிப்படு கின்றது என்ற கொள்கையுடையவர்கள் சத்காரியவாத்தில் ஒரு பிரிவு காரியம் காரணத்தின் உண்மையான மாற்றம் எனக் கூறுகின்றனது . அது சத்காரியவாத பரிணாமவாதம் என அழைக்கப்படுகின்றது. மற்றைய பிரிவு காரியம் காரணத்தின் உண்மையான மாற்றம் அல்ல என்றும் மாற்றம் வெறும் தோற்றமே எனவும் கூறுகின்றது. இது சத்காரியவாத விவர்த்தவாதம் எனப்படுகின்றது. சாங்கிய -

யோகம், இராமனுஜர் வேதாந்தம் என்பன சத்காரியவாத பரிணாம வாதத்தினை ஏற்றுக் கொள்கின்றன. சங்கரர் வேதாந்தம், சூன்யவாதம், விஞ்ஞானவாதம் போன்ற மகாயான பௌத்தப் பிரிவுகளும் சத்காரியவாத விவர்த்த வாதத்தினை ஏற்றுக் கொள்ளுகின்றன. சாங்கியம் சிறப்பாக பிரகிருதி பரிணாம வாதத்தினை விளக்குகின்றது.

சாங்கியம் சத்காரியவாதத்தினை ஏற்றுக் கொள்வதால் எல்லாவகையான சடப் பொருள்களும் பிரகிருதியில் இருந்ததென்றும் பரிணாமக் கூறுகளாக விளங்குகின்றது. பிரகிருதி என்பது சடப் பொருள்களின் அடிப்படை மூலமாக என்றும் உள்ள பொருளாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் சடப் பொருட்கள் புதிய தோற்றமாகவோ அறிவிற்குட்படுவனவாகவோ கூறப்படவில்லை. இல்லாத பொருட்களுக்கு தோற்றமில்லை என்பதும் உள்பொருளுக்கு அழிவில்லை என்பதும் சாங்கிய தர்சனத்தின் அடிப்படைக்கோட்பாடாகும். இவ்வகையான சத்காரியவாதத்திற்கு சார்பாக சாட்சியம் சில வாதங்களை முன்வைக்கிறது.

1. காரியம் காரணத்தால் முன்னரே இல்லாவிடில் காரியம் முயற்கொம்பு போலவும், ஆகாயத் தாமரை போலவும் இப்பொருள் ஆகிவிடும்.
2. காரியம் என்பது மூலமான காரணத்தின் வெளிப்பாடாகும். ஏனெனில் காரணத்தினால் காரியம் தங்கியுள்ளது.
3. எந்த ஒரு பொருளும் ஏதாவது ஒரு பொருளிலிருந்து தோற்றுவிக்கப்படக் கூடியதல்ல அதனால் வெளிப்பாட்டிற்கு முன்னரே காரணத்தில் காரியம் உள்ளடங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.
4. உண்மையில் எது காரணத்தினால் உள்ளடங்கி உள்ளதோ, அதாவது உபாதான காரணமே காரியமாக வெளிப்படுத்துகின்றது. இந்த வகையில் எது காரணத்தின் உள்ளடங்கி இருக்கின்றதோ அதுவே காரியமாக வெளிப் படுகின்றது. இது இவ்வாறாக இல்லாவிட்டால் தயிர் தண்ணீரிலிருந்தும், எண்ணெய் மண்ணிலிருந்தும் தோற்றுவிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.
5. காரியம் காரணததின் தன்மையைக் கொண்டிருக்கும் காரியம், காரணத்தின் சாரமாக உள்ளது. காரணமும் காரியமும் ஒரே நிலையினது உள்ளடக்கிய நிலையினையும் வெளிப்பாட்டு நிலையினையும் குறிக்கின்றன.

## பிரகிருதி.

காரணகாரியக் கோட்பாட்டில் உண்மையான மாற்றத்தினை ஏற்றுக் கொள்ளும் சத்காரியவாத பரிணாம வாதத்தினை சாங்கியம் கூறுவதனால் பிரகிருதியை சடப் பொருளின் மூலமாகக் கூறுகின்றது. பிரகிருதியே அதனுள் உள்ள டக்கப்படாததான ஆன்மாவைத் தவிர பௌதிக இயலாக உள்ள எல்லாவற்றை யும் விளக்குகின்றது. சடமாகவும் ஆற்றலாகவுமுள்ள எல்லாவற்றையும் பிரகிருதிக் கோட்பாடு விளக்குகின்றது. இதிலிருந்து பலதிறப்பட்ட பிரபஞ்சம் பரிணமிக்கின்றது. தனக்கெனக் காரணமில்லாத பிரகிருதியிலிருந்து எல்லா சடரீதியான பிரபஞ்சப் பொருட்கள் தோன்றுகின்றன. இது பிரபஞ்சத்தின் முதற்கொள்கையாகவும், பிரதான காரணமாகவும் எல்லாக் காரியங்களுக்கும் விளைவுகளுக்கும் அவ்வியக்தமான அல்லது வெளிப்படாத நிலையில் உள்ள காரணமாகவும் கூறப்படுகின்றது. பிரகிருதியின் அவ்விவயக்தமான நுண்மையான மூலமான நிலையினை அதன் எல்லாக் காரியங்களிலுமிருந்து நாம் அனுமானிக்கலாம். பிரகிருதி அறிவு நிலையற்ற உணர்வு நிலையற்ற மூலப்பொருளாகும். அது எதிலும் தங்கியில்லாதது. முழுமையானது, ஒன்றாக உள்ளது. என்றுமுள்ளதாகவும் தோற்றத்திற்கும் அழிவிற்கும் அப்பாற்பட்டதான உண்மைப் பொருளாக சாங்கியம் பிரகிருதியை ஏற்றுக் கொள்கின்றது.

பௌதிகப் பிரபஞ்சத்தின் முதன்மையான இயல்புகள் சத்வம், ரஜஸ், தமஸ் எனும் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றது. பிரகிருதியின் பகுதிகளாக அவை உள்ளன. இம்மூன்று கூறுகளும் குணங்கள் என அழைக்கப்படுகின்றன. அவற்றை

பற்றிய கருத்தே இத் தர்சனத்தில் மிகவும் முதன்மை வாய்ந்ததாகும். பிரகிருதின் இந்த மூன்று குணங்களும் சமநிலையில் இருக்கும்போது பிரகிருதி வெளிப்படாது அவ்வியக்தமாக இருக்கின்றது. அவற்றின் பெயர்கள் குறிப்பிடுவதுபோல் இவை பிரகிருதின் பண்புகள் அல்ல. அவ்வாறு ஏற்றுக் கொண்டால் நியாய தர்சனத்தைப் போல் பொருளுக்கும் பண்புகளுக்கு மிடையிலான வேறுபாட்டினை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். இதனால் சாங்கியம் இக்குணங்களை பிரகிருதியில் உள்ளடக்கிய பகுதிகளாக சொல்கின்றது. சத்வம் எனப்படுவது உண்மை அலலது இருப்பு என்பதனைக் குறிப்பதாகவும், எல்லாப் பொருள்களிலும் உள்ள உணர்வுத் தன்மையின் வெளிப்பாட்டிற்கு காரணமாகவும் உள்ளது. இது நன்மையாகவும், மகிழ்ச்சி தருவதாகவும் உள்ளது. சத்வம் நேர்த்தியான இலேசான தன்மை யுள்ளவற்றையும் குறிக்கின்றது. மகிழ்ச்சி, மேல் நோக்கிய செயற்பாடு, சக்தி, ஒளி என்பனவற்றைக் குறிப்பதாகவும் வெள்ளை நிறத்துடன் தொடர்புபட்டதாகவும் கூறப்படுகின்றது.

ரஜஸ் என்பது செயலாற்றல் தன்மை உள்ளனவற்றை (Active) குறிப்பிடுகின்றது. ரஜஸ் அசைவு பற்றிய கொள்கை (Motion) யாகவும் அமைகின்றது. இது துன்பத்தினைத் தோற்றுவிப்பதாகும் இதன் நிறம் சிவப்பாகவும் குறிப்பிடப்படுகின்றது.தமஸ் என்பது கனமான தன்மை உள்ளனவற்றைக் குறிப்ப தாகவும் இருள் நிறைந்ததாகவும் கருதப்படுகின்றது. இது வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றது. குழப்பம், எதிர்மறைத் தன்மை என்பனவற்றைக் குறிக்கும் தமஸ் இருண்ட அல்லது கறுப்பு நிறத்தினைக் குறிக்கின்றது. பிரகிருதியின் பகுதிகளான அம் மூன்று குணங்களும் எந்நிலையிலும் பிரிவதில்லை.

இம் மூன்று குணங்களும் பிரகிருதியில் சம நிலயில் இருக்கும் போது பிர கிருதி அவ்வியக்தமாக அதன் மூல நிலையில் உள்ளது. அந்நிலையில் பிர கிருதி பரிணாமம் அடைவதில்லை என்றும் மாறிக் கொண்டிருக்கும் இக் குணங்களின் சமநிலை திரியும் போது பிரகிருதி பரிணாமம் அடைகின்றது. அதுவே சாங்கியத்தின் பிரகிருதி பரிணாமம் கொள்கையாக - கோட்பாடாக (Theory of Evolution) அமைகின்றது. பரிணாமம் இங்கு கருதப்படுகின்ற வகையில் அது ஜடத்தின் அழிவின்மையையும், ஆற்றலின் நிலைத்திருக்கும் தன்மையினதும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இல்லாத பொரு ளுக்குத் தோற்றமில்லை, உள் பொருளுக்குத் அழிவில்லை, என்ற கருத்தினை இப்பரிணாமம் கோட்பாடு வெளிப்படுத்துகின்றது. தோற்றம் அல்லது பரிணாமம் என்பது உள்ளடக்கிய நிலையில் இருப்பதனை வெளிக் கொணர்தல் (Abhivyakti) மட்டுமேயன்றி புதிதான படைப்பன்று. இதுவே சாங்கியத்தனி சத்காரிய வாதத்தின் அடிப்படைக் கருத்தாகும். பரிணாமம் நிலைகளும் ஒடுக்க நிலைகளும் மாறி மாறி நிகழ்வதனால் ஒழுக்க நிலையில் பிரகிருதியின் மூன்று குணங்களும் முடிவின்றிச் செயலாற்றுவதாக இருப்பினும் முழுமையான சம நிலையில் உள்ளன. பரிணாமம் தொடங்குகின்ற சமயத்தில் இந்நிலை மாறி சத்வம் மேலோங்கி இருக்கின்ற நிலைக்கு வருகின்றது. இது பலவகையான உலகப் பொருட்களின் தோற்றமான பரிணாமத்தின் தொடக்க நிலையைக் குறிப்பிடுவதுடன் முதல் பரிணாமக் கூற்றினை வெளிப்படும் நிலையாகக் கொள்ள லாம். பிரகிருதியில் இருந்து மஹத் (The Great) அல்லது புத்தி (Intellect) எனும் பரிணாமக் கூறு முதன் முதலாக தோன்றுகின்றது. யோக தர்சனத்தின் படி இந்த மாற்றத்திற்கான முதல் தூண்டுதல் கடவுள் அல்லது ஈஸ்வ ரனிடமருந்து வருகின்றது. பரம்பொருளை அல்லது ஈஸ்வரனை ஏற்பரிணாமம்" ஒரே திசையில் நிகழும் தொடர்நத முன்னேற்றமான்று. பரிணாம நிலையில் இருக்கும் போது பிரகிருதி ஒடுக்க நிலைக்கு மீள்வதற்கான போக்கினை உடையதாதலால் ஒடுக்கமே அதன் இயல்பான நிலையாகவும் கருதப்படுகின்றது பரிணாமம் நோக்கமுடையதாகவும் (Teleological) கருதப்படுகின்றது.

மாறுதலுக்குட்படாத புருஷர்களைத் தவிர சாங்கியத்தின் பரிணாம் கோட்பாடு சாங்கியத்தின் இருபத்து நான்கு தத்துவங்களையும் விளக்குகின்றது. பரிணாமத்தின் நிலை பின்வருமாறு அமைகின்றது.

1. பிரகிருதி

⇩

2. மஹத் அல்லது புத்தி

⇩

3. அகங்காரம்

4. மனம் | 4-9 புலன்கள் | 10-14 தொழில் உறுப்பு | 15-19 தன்மாத்திரைகள்

⇩

20-24 பஞ்சபூதங்கள்

காத சாங்கிய தர்சனத்தின் படி புருஷனின் முன்னிலையில் அம்மாற்றம் நிகழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. புருஷன் செயலற்றதாக இருந்தாலும் பிரகிருதியை மாற்றத்திற்கு உட்படுத்துவது இரும்பைக் கவரும் காந்தத்தினைக் கொண்டு விளக்கப்படுகின்றது. ஆனால் இவ்விளகக்கம் திருப்தி தருவதாக இல்லை. சாங்கிய தர்சனத்தின்படி பிரகிருதி இல்லாத புருஷனும் புருஷன் இல்லாத பிரகிருதியும் செயற்பட முடியாதவை. செயற்பாடற்ற புருஷனும் அறிவற்ற பிரகிருதியும் இணைந்து செயற்படுவதனையே சாங்கியம் விளக்குகின்றது. இதனாலேயே பரிணாமச் சுழற்சி ஏற்படுகின்றது. பிரகிருதியைப் போலவே புருஷனும் என்றுமுள்ளது. எங்குமுள்ளது, ஆதலினால் பிரகிருதியின் பரிணாமத்திற்குத் தேவையான நிலை எப்போதும் உள்ளது. ஆனால் பரிணாமத்தின் · போக்கு இடையுறவு படுவதாகக் கருதப்படுகின்றது. பரிணாமத்தின் போக்கு இடையறவு படுவதனை உயிர்களின் பழைய கர்மாவைக் கொண்டு விளக்குவது சரியாகாது. ஏனெனில் புருஷன் நன்மை அலலது தீமையினால் தொடர்பு படாதிருப்பதனாலும் கர்மாவும் அதன் விளைவுகளும் புத்தியைப் பத்தி பிரகிருதியில் உள்ளடக்கிய நிலையாகவும்
காட்டப்படுவதனால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. மேலும் உயிர்களின் அல்லது புருஷனின் தன்மையை சாங்கியம் ஏற்றுக் கொள்வதால் புருஷனின ஒன்றைக் குறிப்பதா அனைத்தையும் குறிப்பதா என்பதனை அறிவதில் இடர்பாடு எழுகின்றது.

பரிணாமத் தொடர்ச்சி நுண்ணிய நிலையிலுள்ள தன்மாத்திரைகள் ஐந்து புற நிலையிலுள்ள பூதங்கள் ஐந்து ஆகிய பௌதிக இயல்பான தனிமங்களுடன் மனம் போன்ற உளஇயலான தனிமங்கள் அல்லது கூறுகளையும் உள்ளடக்கி உள்ளது. உளஇயலான தனிமங்களுக்கு பிரகிருதியை மூலமாகக் கொள்வது முரண்போல் தோன்றினாலும் அது முரண்பாடற்றது என்பது விளக்கப்படுகின்றது. சாங்கிய தர்சனத்தன் இந்நிலை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் தெளிவாக்கப்படுகின்றது. முகம் பார்க்கும் கண்ணாடி தம்முடைய தோற்றங்களை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் அது மாட்டப்படிருக்கும் சுவரினால் அவ்வாறு செய்ய இயலாது , எனினும் இரண்டும் சட இயல்பானவையே, இவ்வாறே மேற்குறிப்பிட்ட இரு வகையான உருப்படிகளும் பிரகிருதியிலிருந்து தோன்றிய போதிலும் அகத்தின் (Self) தொடர்பால் வெவ்வேறு வகையாக இயங்குகின்றன. ஒன்று அதனுடைய செல்வாக்கிற்கு உடனடியாக உட்படுகின்றது. மற்றொன்று அவ்வாறன்று எனவே இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு அளவு பற்றியதே. தன்மை பற்றிய தன்று. உளஇயல்பான கூறுகள் பௌதிக நிலையைப் பொறுத்தவரையில் நரம்பு

மண்டலத்துடன் ஒப்பிடப்படுகின்றன.

மஹத் எனப்படும் பரிணாமக் கூறு உலகப் பொருட்களின் முதற் பரிணாமம் கூறாகும். இது புத்தி எனவும் அழைக்கப்படுகின்றது. புத்தி அகங்காரம் மனம் என்பன உள இயலான பரிணாமக் கூறுகளாகும். சாங்கியத்தில் உள இயல்பானவையும் பிரகிருதியிலிருந்தே தோன்றுகின்றன மஹத் அல்லது புத்தி உணர்விலிருந்து (Consciousness) வேறுபடுகின்றது. புருஷன் மட்டுமே தூய உணர்வாகும் (Pure Consciouseness) புத்தி பிரகிருதியிலிருந்து பரிணமிப்பதனால் அது சடத்தன்மையுடையதாகும் இது சடத்தின் மிகவும் மென்மையான தன்மையினால் ஆக்கப்பட்டதனால் புருஷனின் உணர்வு நிலையை (Cosciousness) பிரதிபலிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

மஹத்திலிருந்து அகங்காரம் பரிணமிக்கின்றது. இது தன்முனைப்பு உணர்வினைக் குறிக்கின்றது. புருஷன் தவறாக இத்தகைய தன்முனைப்புடன் தன்னை இனம் காணுதலே அறியாமைக்கும் துன்பத்திற்குதம் காரணமாகின்றது. சாங்கியம் மூன்று தணங்களின் அடிப்படையில் அகங்காரத்தின் மூன்று பிரிவுகளாகக் காட்டுகின்றன.

சாத்வீக அகங்காரத்திலிருந்து மனம் என்ற அகப் புலனுறுப்பு பரிணமிக்கின்றது. இது ஏனைய புலனுறுப்புக்களுடன் தொடர்புபடக் கூடியது. தொழிலுறுப்புகளும் இதிலிருந்து பரிணமிக்கின்றன. புத்தி, அகங்காரம் மனம் என்பன உளகியல் சார்ந்த அறிதல், விருப்பு, உணர்தல் (Knowing wiling fealing) என்பவற்றை உணர்த்துகின்றன. இவை புருஷனின் உணர்வினால் உணர்வு நிலையைப் பிரதிபலிக்கின்றன. மனம் அகப் புலனுறுப்பாகவும் ஐந்து புலன்கள், ஐந்து தொழிலுறுப்புக்ள் வெளிப் புலனுறுப்புக்களாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான பதின்மூன்று பரிணாமக் கூறுகளையும் கரணங்கள் என சாங்கியம் கூறுகின்றது.

தாமச அகங்காரத்திலிருந்து ஐந்து நுண்ணிய நிலையிலுள்ள தன்மாத்திரைகளும் பரிணமிக்கின்றன. இவை ஒளி (Light) மணம் (Smell) சுவை (Taste) ஊறு ( Touch) ஓசை (Sound) ஆகியவற்றின் சாரமாக அமைகின்றன. ஓசையின் காரணமாக ஆகாயமும், ஓசை, ஊறு என்பனவற்றின் சாரமாக காற்றும் நெருப்பு, ஓசை ஊறு நிறம் அல்லது ஒளி என்பனவற்றின் சாரமாகவும் தோன்றுகின்றது. சுவை, ஓசை,ஊறு, ஒளி என்பனவற்றின் சாரமான நீரும், ஓசை ஊறு ஒளி மணம் சுபை என்பவற்றின் சாரமாக நிலமும் தோன்றுகின்றன. இந்தவகையில் நுண்ணிய நிலையிலுள்ள தன்மாத்திரைகளிலிருந்து ஐந்து பருநிலையிலுள்ள பூதங்கள் தோன்றுகின்றன. இவ்வாறாக இருபத்துநான்கு தத்துவங்களையும் சாங்கிய பிரகிருதி பரிணாமக் கோட்பாடு விளக்குகின்றது.

**புருஷன்**

சாங்கியக் கொள்கையின் படி புருஷன் என்பது ஆத்மிகம் சார்ந்த உண்மையை ஏற்றுக் கொள்ளும் நிலையைக் குறிக்கின்றது. புருஷன் தனக் கெனக் காரணமில்லாத தூய உணர்வாக (Pure Conciousness) கூறப்படுகின்றது. புருஷன் மாறாதது, என்றுமுள்ளது, எங்குமுள்ளது, செயலனைத்தும் பிரகிருதிக்கே வரையறுக்கப்பட்டுள்ளதால் புருஷன் முற்றிலும் செயலற்றதாக் காட்டப்பட் டுள்ளது. பிரகிருதியைப் போலவே புருஷனையும் அறிவின் உதவியால் கோட்பாட்டு ரீதியாக சாங்கியம் விளக்குகின்றது. செயல் அனைத்தினையும் புத்தி இயற்றுவதாகவும் புருஷன் உணர்வின் (Laitanya) இருப்பதனால் தனித்தனியாக அவை நுகர்வோனாக இருக்க முடியாது. எனினும் இரண்டு சேர்ந்து அவ்வாறிக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. புருஷன் ஒளி பெற்றுள்ளது. அல்லது புத்தியில் பிரதிபலிக்கின்றது. ஆன்மா வெளிப்படுதற்கு பௌதிக இயலான ஊடகமாக (Physiul Medium) புத்தி கருதப்படுகின்றது. இவ்வகையான அவற்றின் ஒருமைப்பாட்டை புருஷன் அல்லது கடந்த நிலை அகத்தின்று (Transcendental self) வேறுபடுத்துவதற்காக, அதனை புத்தியை நுகர்நிலை அகம் (Empirical Self) என்றும் வழங்கலாம். அத்தகைய தொடர்பினால் நுகர்நிலை அகத்திலுள்ள தனிமங்கள் ஒவ்வொன்றும் முழுமையான மாற்றம் அடைவதாகத் தோன்றுகின்றது. அதாவது உணர்வற்ற புத்தி உணர்வு பெறுவதாகவும் செயலற்ற புருஷன் செயலாற்றுவதாகவும் தோன்றுகின்றது.12

புருஷனின் சாரம் உணர்வுநிலை, "புருஷன் என்பது உணர்வின் பண்பு களைக் கொண்டுள்ளது என்ற வகையில் கூறப்படாது புருஷனே உணர்வுநில எனக் கூறப்படுகின்றது. இது தூயதும், கடந்த நிலையிலுள்ள உணர்வாகும். இதுவே எல்லாவற்றையும் அறிகின்றது. எலலா அறிவிற்கும் அடிப்படையானது. இது தூய அகம் (Pure Subject) ஆகும். அது அறியப்படும் பொருளாக இல் லாமல் அதுவே அறிவாக உள்ளது. இது சாந்தமானது, நிரந்தரமானது, நிலை யானதுமாகும், புருஷன் காலத்திற்கும் வெளிக்கும் அப்பாற்பட்டது. மாற் றத்திற்கும் செயற்பாட்டிற்கும் அப்பாற்றபட்டது. இது மாறாத உள்நிலையாகவும் தனக்கெனக் காரணமில்லாததும் நிரந்தரமானதுமாகும். இது மாறாத உள்நிலையாக அறிவின் அடிப்படையாக உள்ளது.

இவ்வாறான புருஷனைப் பற்றி சாங்கியம் ஐந்து நிருபங்களை முன்வைக் கின்றது.

1. எல்லா உலகப் பொருள்களும் புருஷனுக்காகவே உள்ளன. உடல், புலன்கள், மனம்,புத்தி ஆகியன புருஷனை அறிய உணர உதவுகின்றன. முக்குணங்கள், பிரகிருதி எல்லாமே புருஷனை அறிவதற்கான மூலகங்கள், இதனால் பிரகிருதி பரிணாமம் நோக்கமுடையது. அதாவது பிரகிருதி பரிணமிப்பது புருஷனின் தூய உணர்வு நிலையை உணர வைப்பதற்காக என்ற வகையில் அமையும் நிருபணம் நோக்கயியல் சார்ந்த நிருபணமாகும். (Teleological Proof)

2. எல்லாப் பொருட்களும் மூன்று குணங்களைக் கொண்டிருப்பதனால் அவை அளவையியல் ரீதியாக புருஷனின் சாட்சியை உணர்த்துகின்றன. மூன்று குணங்களையும் தாண்டியதாகப் புருஷன் காணப்படுகின்றது. இது அளவையியல் நிருபணமாகும் (Logical Proof)

3. தூய உணர்வின் கடந்த நிலை ஒருமை (Transcendental Synthetic Unity) எல்லா அனுபவங்களையும் ஒழுங்குபடுத்துவதாக இருந்தல் வேண்டும். எல்லா அறிவும் ஆத்மாவின் - புருஷனின் இருப்பினை முற்கோளாகக் கொள்கின்றது. எல்லா வகையான உலகியல் அறிவிற்குமான ஆதாரமாக ஆத்மா இருக்கவேண்டும். எல்லா வகையான உடன்பாட்டு எதிர்மறை நிலைகள் இதனை முற்கோளாகக் கொள்கின்றன. ஆத்மா இல்லாமல் அனுபவம் அனுபவமாக முடியாது. இது உண்மையியல் நிருபணமாக அமைகின்றது. (Ontological Proof).

4. அறிவற்ற பிரகிருதி அதன் படைப்புகளை அனுபவிக் முடியாது. எனவே அங்கு அறிவு ரீதியான கோட்பாடொன்று, பிரகிருதிக்ள உலகப் பொருட்களை அனுபவிப்பதற்கு தேவைப்படுகின்றது. அதனை அனுபவிக்கும அறிவுப் பொருளாக புருஷன் விளங்குகின்றது. இது அறவியல் சார்ந்த நிருபணமாக அமைகின்றது. (Ethical Proof)

5. உலகத் துன்பங்களிலிருந்தும் விடுதலையடைய முயற்சிக்கும் மனிதர்கள் இருக்கின்றனர். இத்தகைய விடுதலைக்கான விருப்பு, ஆத்மா இருப்பதனை முற்கோளாகக் கொள்கின்றது. இது மறைஞான அல்லது சமயம் சார்ந்த நிரு பணமாக அமைகின்றது. (My Stical or Religious Proof).

அத்வைத வேதாந்தத்தைப்போல் அல்லாது, சைவசித்தாந்தம், ஜைனம், மீமாம்சை சாங்கியம் என்பன புருஷனின் பன்மைக் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன. எல்லா உயிர்களும் அடிப்படையில் ஒரே தன்மையுடையன என்பது சாங்கியத்தின் கருத்தாகும். ஆனால் எண்ணிக்கையில் அவை வேறுபடுகின்றன. அவற்றின் சாரம் உணர்வு நிலையாக இருந்தபோம் பேரானந்த நிலை (Bliss) உணர்வு நிலையிலிருந்து வேறுபடுகின்றது. சத்துவ குணத்தின் வெளிப்பாடாக பேரானந்த நிலை குறிப்பிடப்படுகின்றது சாங்கியம் புருஷனின் பன்மை நிலைக்கும் பல காரணங்களைத் தருகின்றது.

மூலசாங்கியம் (Original Sankya) ஒருமைவாம் (Monistic) கடவுட் கொள்கை (Theistic) சார்ந்ததுமாக்க கருதப்படுகின்றபோதிலும் செந்நெறி சாங்கியம் (Classical Sankya) உலோகாயுதம், ஜைனம் முற்காலப் பௌத்தம் போன்றவற் றின்

செல்வாக்கு காரணமாக கடவுட் கோட்பாடற்ற கொள்கையாக மாறியதாக சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். ஆனால் இக்கருத்துபற்றிய தெளிவான ஆய்வுகள் வெளிவரவில்லை. சாங்கியம் வேதங்களின் சான்றுக்கமைய ஏற்றுக் கொள்வதனால் வைதிக தர்சனம் என அழைக்கப்படுகின்றது. சாங்கியம் கடவுள் மறுப்பு வாதங்களை முன்வைக்கவில்லை.

இந்த வகையில் சாங்கிய முறைமை ஆத்மீகப் பன்மைவாதமாகவும், (Spiritualistic Pluralism) கடவுட் கோட்பாடற்ற காட்சிப் பொருட்கொள்கையாகவும் (Athestic Realism) இணைக்கப்படமுடியாத இருமைவாதமாகவும் (Uncom promised Dualism) ஆகவும் உள்ளது. புருஷனை பிரகிருதித் தளையிலிருந்து விடுவிக்கும் அறிவு நிலையே அதன் அடிப்படை கருத்தாகவும் விடுதலை பற்றிய செய்தியாகவும் உள்ளது. கோட்பாட்டு ரீதியான சாங்கிய பௌதிக வதீதக் கருத்துக்களின் நடைமுறைசார் ஆத்மீகப் பயிற்சி நெறியாக, சாங்கியத்தின் நடைமுறைசார் தர்சனமாக யோகம் விளங்குகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சங்கரர் உரை
வேதாந்த சூத்திரம் I & II
Professor Keesth The Samkga Systwm PP -8-10
2. சாந்தோக்கிய உபநிடதம்
3. பிரஸ்ன உபநிடதம்
4. கடோபநிடதம்
5. மூண்டோக உபநிடதம் III,ii,ii

'சினேகபாவமுள்ள இரு பறைவைகள் ஓரே மரக்கிளையில் உள்ளன. அதில் ஒன்று மரத்தில் உள்ள பழததினை உண்டு கொண்டிருக்கின்றது. மற்றது உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றது." இக்கருத்து இறமை வாதத்தின் சாரமாக அமைவதாக விளக்கப்படுகிறது.

6. சுவேதாஸ்வரத உபநிடதம் V5,10,12,16,vi10,3,8
7. மகாபாரதம் xii318,
சாந்திபர்வம் 303, 308
8. பகவத்கீதை ii,39,iii,42,v 4-5

'இந்திரியங்க்ள உயர்ந்தவை, இந்திரியங்களைக் காட்டிலும் மனம் உயர்ந்தது, மனதைக்காட்டிலும் புத்தி உயர்ந்தது, புத்தியைக் காட்டிலும் ஆத்மா உயர்ந்தது" - III42.

9. எம்.ஹரியண்ணா
இந்திய தத்துவம் II
சென்னை 1968
P. 104.
10. மாக்ஸ்மூலர் SS 242
மேற்கோள் - மேற்படி நூல்.
11. சாங்கிய காரிகை St. 20,
மேற்கோள் - மேற்படிநூல்.
12. Chandra dhar Charma A Critical Survey of India Philosophy
Rider and Company London - 1960

*பேராதனைப் பல்கலைக்கழகம்*

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையினரால்
31-05-97 அன்று நடாத்தப்பட்ட பாடசாலை
மாணவர்களுக்கிடையிலான போட்டிகளில்
நடுவர்களாக கடமை புரிந்தோர்.

செல்விகள் - எம். ஜெயந்தி குமாரி.
நு/தங்ககெலே த.வி. இல -1
- கே. இந்திராணி
ப/எல்பியன் த.வி
- பீ. பத்மினி
ப/எல்பியன் த.வி

- எஸ். திலகா - ஆசிரியை
- எம். யோகமலர் - ஆசிரியை

திருவாளர்கள் - எஸ். கனகசபேசன்
கட்டடக் கலைஞர், நுவரெலியா.
- எஸ். பாலச்சந்திரன்
- ஏ. சௌந்தர்ராஜன்
நு/ நானுஓயா த.வி.
- சி. செல்லத்துரை - அதிபர்
நு/ வங்கி ஓயா. த.வி.
- எம். விஸ்வநாதன் - ஆசிரியர்
திருவாளர் - கே. பிரசங்ககுமார் - ஆசிரியர்

உங்கள் சேவை என்றும் எம் மனதில் நிழலாய்....

## நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் 7ம் ஆண்டை முன்னிட்டும், சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை முன்னிட்டும் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்.

*1. மலையக ரீதியாக நடைபெற்ற திறந்த போட்டி முடிவுகள்.*

**A. சிறுகதை**

1ம் இடம் - மு.ரோகினி, ஹன்துன்கலை, நாவலப்பிட்டிய.
2ம் இடம் - மு. பிரபாவதி, நாவலப்பிட்டி வீதி, பத்தனை.
3ம் இடம் - சுந்தரி மலைசுவாமி, மின்னா தோட்டம், சாமிமலை.

**B. கவிதை**

1ம் இடம் - சி. இராதாமணாளன் ஹப்புத்தளை.
2ம் இடம் - (இருவர்) (1) எம். எஸ். பரமேஸ்வரன், பசறை. (2) மனோகரன் கோபால், ஹப்புத்தளை.
3ம் இடம் - (இருவர்) (1) ரஜனி பாக்கியநாதன், ஹால்கர - னோயா, இராகலை. (2) யோகேஸ்வரி ஆறுமுகம், கோண கலை - பசறை.

**C. ஆராய்ச்சிக்கட்டுரை** - ஆக்கங்கள் தரமற்றதால் போட்டியி லிருந்து விலக்கப் பட்டது.
(முடிவு - நடுவர்களே)

*2. பாடசாலை மட்ட போட்டியாளர்களின் முடிவுகள்.*

***கீழ்ப்பிரிவு***

(1) தேவாரப்பண்ணிசை
- 1ம் இடம் - தி. சத்தியராஜா, நு/மெராயா த.வி. லிந்துலை.
- 2ம் இடம் - கா.சியாமளா, நு/ பரிசுத்த திரித்துவ கல்லூரி நுவரெலியா
- 3ம் இடம் - இரா. பிரியாழினி, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா.

(2) பேச்சு
- 1ம் இடம் - ஆ. கிரிஸாந்தினி, நு/ சென்கிளயர் த.வி. தலவாக்கலை.
- 2ம் இடம் - எம். யுதிக்ஷினி, நு/ பரிசுத்த திரித்துவக்கல்லூரி, நுவரெலியா.
- 3ம் இடம் - பா. பவதாரினி, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி.

(3) தனிநடனம்
- 1ம் இடம் - இ. விஜயதர்ஷினி, நு/ மெராயா த.வி. லிந்துலை.

***இடைநிலைப்பிரிவு***

(1) பேச்சு
- 1ம் இடம் - வீ. நிருபனா, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா.

| | | |
|---|---|---|
| | - 2ம் இடம் | - வீ. ருசாந்பாபு, நு/ கொட்டகலை த.ம.வி. கொட்டகலை. |
| | - 3ம் இடம் | - து. செந்தில்குமார், அம்/சென் ஜோன் பொஸ்கோ, ஹட்டன். |
| (2) குழுநடனம் பிரிவு 2 | - 1ம் இடம் | - நு/நல்லாயன் மகளிர் கல்லூரி மாணவியர் நுவரெலியா. |
| (3) தனி நடனம் பிரிவு 2 | - 1ம் இடம் | - S. ரேனுகாதேவி, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி மாணவியர் நுவரெலியா. |
| (4) கவிதை | - 1ம் இடம் | - கா. பிரதீபன், நு/ மெராயா த.வி. லிந்துலை. |
| | - 2ம் இடம் | - பெ. தேவப்பிரியாணி, நு/ கொட்டகலை. த.ம.வி. கொட்டகலை. |
| | - 3ம் இடம் | - ஆ. விஜயரட்ணம், நு/ சென்கிளயர் த.ம.வி. தலாவாக்கலை. |
| (5) கட்டுரை | - 1ம் இடம் | - ஜெ. அருள்குமரன், நு/ சென்ஜோன் பொஸ்கோ த.வி. ஹட்டீன். |
| | - 2ம் இடம் | - கே. சரிலா, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா. |
| | - 3ம் இடம் | - வீ. நிஷாந்தி நு/டெஸ்போட் த.வி. நானுஓயா. |
| (6) சிறுகதை | - 1ம் இடம் | - எஸ். ரமேஸ் - நு/ சென் அந்தனீஸ் த.வி. நுவரெலியா |
| | - 2ம் இடம் | - கே. தீபா. நு/ கோட்லொஜ் த.வி. கந் தப்பளை. |
| | - 3ம் இடம் | - ப. தேன்மொழி, நு/ மராயா த.வி. லிந்துலை. |

***மேற்பிரிவு***

| | | |
|---|---|---|
| (1) பேச்சு | - 1ம் இடம் | - தி. பவதாரணி, நு/கொட்டகலை த.ம.வி. கொட்டகலை. |
| | - 2ம் இடம் | - ஏ. சியாமளா, நு/ பரிசுத்த திரித்துவக் கல்லூரி நுவரெலியா |
| | - 3ம் இடம் | - கே. கெகதீஸ்வரன், நு/ தலவாக்கலை த.ம.வி. தலவாக்கலை |
| (2) குழுநடனம் பிரிவு 3 | - 1ம் இடம் | - நு/ நல்லாயன், மகளிர் கல்லூரி மாணவிகள் நுவரெலியா. |
| (3) தனிநடனம் பிரிவு 3 | - 1ம் இடம் | - வீ. நிரூபனா நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா. |

| | | |
|---|---|---|
| (4) கட்டுரை | - 1ம் இடம் | - சு. சுதாஜினி, நு/ சென்கிளயர் த.வி. தலவாக்கலை |
| | - 2ம் இடம் | - ந. துஷதாலக்ஷ்மி, நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா |
| | - 3ம் இடம் | - ஆர். சுபாஷினி, நு/ தலவாக்கலை. த.ம.வி. தலவாக்கலை |
| (5) கவிதை | - 1ம் இடம் | - ப. ரூபதர்ஸனி, நு/ கோட்லொஜ் த.வி. கந்தப்பளை. |
| | - 2ம் இடம் | - கி. சரவணகுமாரி, நு/ கொட்டகலை. த.ம.வி. கொட்டகலை. |
| | - 3ம் இடம் | - ச. விக்னேஸ்வரி, நு/ தலாவாக்கலை த.ம.வி. தலவாக்கலை. |
| (6) சிறுகதை | - 1ம் இடம் | - எஸ். சுபாஷினி, நு/ சென்கிளயர் த.வி. தலவாக்கலை |
| | - 2ம் இடம் | - ஜே. சசிரூபினி, நு/ பரிசுத்த திரித்துவக்கல்லூரி நுவரெலியா. |
| | - 3ம் இடம் | - டி. கணபதி, நு/ க. சரஸ்வதி, த.ம.வி. புஸல்லாவை. |
| (7) நாடகம் | - 1ம் இடம் | - நு/ நல்லிளைப்பாற்றி, கன்னியர் பாடசாலை நுவரெலியா |
| | - 2ம் இடம் | - நு/ நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா |
| (8) விவாதம் | - 1ம் இடம் | - நு/ கொட்டகலை த.வி. கொட்டகலை |
| | - 2ம் இடம் | - நு/ தலவாக்கலை த.வி தலவாக்கலை |
| | - 3ம் இடம் | - நு/ கோட்லொஜ் த.வி. கந்தப்பளை |

போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக நு / பரிசுத்த திரித்துவக் கல்லூரி மண்டபத்தை ஒழுங்குபடுத்தி தந்த குறித்த பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாமின் சேவைக்கு

*நல் ஆசிகள் நு / இ / க / பே*



நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையை இலங்கையில் உள்ள அமைப்புகளில் சிறந்த அமைப்பாக தெரிவு செய்த வேளை.......



அறநெறிப் பள்ளியை ஆரம்பித்து வைத்த வேளை நடைபெற்ற தேவாரப் பண்ணிசை.



ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூஜையின் போது பத்தர்களுக்கு வழங்கிய அன்னதானம்



சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டை ஒட்டி நடைபெற்ற முத்திரைவெளியீட்டு விழா பிரதம விருந்தினர் கௌரவ, வீ. புத்திரசிகாமணியும் பிற அதிதிகளும்.



அறநெறிப் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்து வைத்த சுவாமி தந்திரதேவாவும், முக்கிய பிரமுகர், மாணவர்களும்.



1996 க.பொ.த.' சாதாரணதர மாணவர்களின் இலவசக் கல்விக் கருத்தரங்கு. (கணிதம்)



சுவாமி விவேகானந்தரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டின்போது பாடசாலை மாணவிகளின் வாழ்த்துப்பா.



க.பொ.த. சாதாரண தர (1996) மாணவர்களுக்கு நடத்தப்பட்ட தமிழ் இலவசக் கருத்தரங்கை ஆரம்பித்து வைக்கும் வண. சகோதரி பப்பெச்சுவா. பின்னணியில் தமிழ் விரிவுரையாளர் சு. சிவலிங்கம்.



*சிவராத்திரியின் போது கோயில் மண்டபத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி*



*பேரவையின் அற நெறிப்பள்ளி மாணவியரின் கோலாட்டம்*

கொழும்பு தமிழ்ச்சங்கம்
நூலகம்



பேரவையின் கலை நிகழ்ச்சி ஒன்றின்போது மாணவி ஒருவரின் அபிநயத் தோற்றம்.



மண்டலாபிஷேக பூஜையின் போது .மேடையேற்றப்பட்ட சிவதாண்டபம்

காயத்ரீ மந்திரத்தின் ஜபம் நோயாளிகளைக் குணப் படுத்தவும் ஆத்மாவை முன்னேறச் செய்யவும் பயன்படுகிறது. திடசித்தமாகச் செய்யப்படும் காயத்ரீ ஜெபம் ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும் திறமை பெறுகிறது.

~ *மகாத்மா காந்தி*

திரு. ஸ்ரீ ரதன்
ஜனனி ஜுவலரி மார்ட்
177 - 1/12 தேவி கொம்ப்லெக்ஸ்
முதல் மாடி, செட்டி தெரு
கொழும்பு - 11.

பாரத மக்களின் அடிமைத்தனம் அரசியல் போராட்டங்களால் மட்டும் வெற்றியடையாது. பாரத மக்களின் ஆத்மாவில் ஒளி பிறக்க வேண்டும். இதற்குக் காயத்ரீ ஜெபம் உதவி செய்யும்.

~ **லோகமான்ய திலகர்**

**ஸ்ரீ காயத்ரி பீடம்**
தம்பிலுவில்,
கிழக்கு மாகாணம்.

நுவரெலியாவில் சுத்தமான
சிறந்த சைவ உணவு வகைகளுக்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும் நீங்கள்
விஜயம் செய்ய வேண்டிய ஸ்தாபனம்

# பிரீந்தா

சைவ உணவகம்

லோசன் வீதி,
நுவரெலியா.

**மலையக ரீதியாக நடந்த சிறுகதை போட்டியில் 2ம் பரிசை தட்டிச் சென்ற கவிதை**

ஆக்கம் :- **எம்.எஸ். பரமேஸ்வரன்**
149, கோவில்கடை பசறை.

# உயர்ந்த மலைகளில் உயராத மலையகம்

"தோட்டக் காட்டான்" என்பதே
நாட்டையாழ்வோர்
நமக்களித்த
வீட்டு விலாசங்கள்.

பட்டினியெங்கள்
பரம்பரைச் சொத்து
கொட்டிடும் மழையே - எங்கள்
வீட்டுக்குள் குளிப்பறை.

அட்டைக்கு அனுதினம்
பட்டினி போக்கிட
பனிதனில் 'காய்தலே' எங்கள்
பரம்பரைப் பணிவிடை.

மாடங்கள் வானில்
உலவிடும் உலகில்
மூடமே யெங்கள்
முகங்களின் முகவரி.

வந்திடும் பிணிதனை
வாயதால் போக்கிடும்
மந்திரவாதியே - எங்கள்
வர்க்கத்தின் வைத்தியர்.

மாட்டுக் கூட்டமாய்
மாய்ந்து மடியினும்
ரொட்டித் துண்டுதான் - எங்கள்
பட்டினி போக்கிகள்.

கள்ளோடு கஞ்சாவை
கலந்தடித்து
வம்புக்குப் போவதே - எங்கள்
வம்சத்தின் வழக்காறு.

அடிமையாய் நாளும்
அவணியில் 'வாழும்
இழிவுதான் எமக்கு
முடிவிலிகள்...

ஆண்டுகள் கரைந்து
ஆட்சிகள் மாறும்
ஓட்டைக் குடிசைதான் எங்கள்
உல்லாச விடுதிகள்
காற்சட்டை போட்டவர்
கண்ணில் பட்டால் அவர்
போட்டது தான் எங்கள்
சட்டமென்போம்.

ஆங்கில மொழியில்
அவர் மொழிந்தால்
அவருதான் - எங்கள்
தலைவரென்போம்.

வாக்குகள் தன்னை
வாங்கும் வரை
வாங்கிடுவோம் - எங்கள்
உரிமையென்பார்.

ஆசனம் தன்னில்
அவர் அமர்ந்தால் - நாளை
வரை நாங்கள்
பொறுப்போமென்பர்.

கானல் நீர்தனில்
பானம் பருகிடும்
கதைதான் - எங்கள்
காவியங்கள்.

புகழிடமில்லாப்
புழுவதாய் உருகியும்
அழுகைதான் - எங்கள்
பொழுது போக்கு.

பொறுமையின் வடிவாய்
உறுதியாய் உழைத்தும்
சிறுமைதான் எங்கள்
சித்திரங்கள்.

அடிமையாய் நாட்டில்
அவணிக்காய் அழிந்தும்
இழிவுதான் - எமக்கு
முடிவிலிகள்....

**மலையக ரீதியாக நடந்த சிறுகதை போட்டியில்**
**1ம் பரிசை தட்டிச் சென்ற சிறுகதை**

ஆக்கம் :- ரோகினி முத்தையா,
நாவலப்பிட்டி.

சிறுகதை

# அக்கரைகள் பச்சையில்லை

இந்திராவின் வீட்டிலிருந்து எழுந்த கூச்சலும் கும்மாளமும் ராசாத்தியைக் கலைக்கின்றன.கைவேலையை அப்படியே விட்டுவிட்டு எழுந்து வந்து எட்டிப் பார்க்கிறாள். நேற்று மாலையிலிருந்தே ஒரே அமர்க்களமாய்த்தான் இருக்கிறது. ஆனால் ராசத்திக்குத்தான் அந்தப் பக்கம் போகவே இன்னும் நேரம் ஒழியவில்லை அந்த 'லைனி'ல் இருக்கும் எட்டு வீடுகளில் இருந்தும் எல்லோருமே வந்து போய் விட்டார்கள். நான்கு வருடங்களுக்கு மேல் வெளிநாட்டில் உழைத்துவிட்டு கைநிறை யக் காசோடும் பொருட்களோடும் வந்திருக்கும் இந்திரா நேற்றிலிருந்து எல்லோரதும் வேடிக்கைப் பொருளாகி இருந்தாள்.

கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்தவள், மீண்டும் உள்ளே போய் அரிசியைக் கழுவத் தொடங்குகிறாள்.

இந்திரா, ராசாத்தி இருவருக்கும் ஏறக்குறைய ஒரே வயதுதான் இருக்கும். மண்வீடு கட்டி விளையாடியதிலிருந்து, வளர்ந்த பின் கொழுந்துக் கூடையை மாட்டிக் கொண்டு கைக்காசுக்கு கொழுந்து பறிக்கப் போனதுவரை எல்லாமே இருவரும் தான். அதெல்லாம் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முந்தைய கதை. உறவினர் ஒருவரின் உபயத்தால் இந்திரா இனாயாவாக சவூதிக்குப் பறந்ததிலிருந்து இருவரும் வெவ்வேறு துருவங்களாகிப் போனார்கள். கடந்த நான்கு வருடங்களில் எவ்வளவு முயன்றும் ராசாத்திக்குப் பேர் பதிய முடியாமல் போனது. தனியார் தோட்டங்களில் அவ்வப்போது நாட்கூலிக்குப் போய் வருவதோடு சரி எந்த மாற்றமும் இல்லாமல் அவர்களது பற்றாக்குறை ஜீவனம் ஓடிக்கொண்டிருக்கிறது.

அரிசியைக் களையத் தொடங்கிய ராசாத்தியின் காதுகளில் ஹிந்திப் பாடல் ஒன்று சத்தமாக வந்து மோதுகிறது. கைகளை உதறிப் பாவாடையில் துடைத்தபடி எழுந்து வெளியில் வருகிறாள். இந்திராவின் வீட்டு வாசலில் இப்போதுதான் ஒருவருமே தென்படவில்லை என்பது தெரிய, இரண்டு வீடுகள் தள்ளியிருக்கும் அந்த வீட்டிற்கு வந்து வாசலிலிருந்து எட்டி உள்ளே பார்க்கிறாள் ராசாத்தி. கண்களிலடிக்கும் சிவப்புக்கலரில் சிக்கன உடையணிந்த இந்திக் கதாநாயகி ஓடியோடி ஆடிக்கொண் டிருக்கிறாள். டீவி அனாதையாக ஓடிக்கொண்டிருக்க முன்னறையில் கண்டபடி பொருட்கள் இறைந்து கிடக்கின்றன. கண்கள் விரிய அவற்றைப் பார்த்தபடி நிற்கிறாள் ராசாத்தி.

'ஹாய் ராசாத்தி வா... வா... இப்பத்தான் வழி தெரிஞ்சுதா?'' என்றவாறு வெளியில் வந்த இந்திராவை அப்பொழுதான் முழுதாகப் பார்க்க முடிகிறது. முழு

நீள கரிய உடையில் ஆங்காங்கே பூக்கள் மின்ன, கட்டையாக வெட்டப்பட்ட கூந்தல் அலட்சியமாய் முதுகில பரந்து கிடக்க, உயர்ந்த பாதணிகள் 'டொக் டொக்" எனச் சப்திக்க நடந்து வந்து கைகளைப் பற்றியவளை நம்பமுடியாமல் பார்க்கிறாள் ராசாத்தி. 'கொழு கொழு'வென மாறியிருந்ததுடன் முகத்தில் ஒரு மினு மினுப்பும் கூடியிருந்தது போலத் தெரிகிறது. மொத்தத்தில் ஆளே மாறிப் போயிருந்தாள். 'என்ன ஒண்ணுமே பேசாம நிற்கிற...... உள்ள வா ராசாத்தி" எனக் கைகளைப் பற்றி இழுக்கிறாள் இந்திரா. "மெத்"தென்று பதிந்து அவளது கைகளில் மோதிரங்கள் விதவிதமாய் மின்னுகின்றன. அவளோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்த ராசாத்திக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது. கைகளைத் துடைத்து துடைத்தே கறுத்துப்போன பாவாடையும் எண்ணெய் வைத்துப் படிய வாரிப் பின்னி நுனியில் முடிச்சிட்ட பின்னலும் தனக்கே வீசும் வியர்வை நெடியுமாய் ராசாத்தி கூனிக் குறுகிப் போகிறாள். வற்புறுத்தி உள்ளிழுத்த இந்திராவின் கரங்களை மெதுவாக விடுவித்தவள். 'இல்ல....... நா..... அப்புறம் வாறேன்......... போயி சோறாக்கணும்" எனத் தடுமாறியவள் ஒரே ஓட்டமாய்த் தன் வீட்டிற்குள் ஓடி மறைகிறாள்.

கைகள் ஏதேதோ வேலைகளைச் செய்ய மனம் இந்திராவைச் சுற்றியே வட்டமிடுகிறது. இருவரும் ஒரே நிலையில் அந்த எஸ்டேட்டை வளைய வந்த நாட்கள் கண்களில் நிழலாட எழுந்து சென்று வீட்டிலிருந்த இரசம் போன சிறிய கண்ணாடியில் தன் உருவத்தை நோக்குகிறாள் ராசாத்தி. அன்றைய நிலையில் எந்த மாற்றமும் இல்லாத தன்னையும் இன்றைய இந்திராவையும் ஒப்பிடுகிறது மனம்.

